# சுகவீனலீவில் சென்ற 30 பொலிஸ் அதிகாரிகளை


விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர் 31 ஆவணி 09 முஹர்ரம் 22 இதழ் 102
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 25-08-1989


## காணவில்லை !
## தேடும் பணியில் பொலிஸார்

[கொழும்பு]

தென்பகுதியில் ஜே. வி. பியினரின் பயமுறுத்தலுக்குப் பயந்து 30 பொலிஸ் உயரதிகாரிகள் சுகவீன லீவு கொடுத்துவிட்டு கடமைககுச் செல்லவில்லை என்றும், இவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள் என்

(8ம் பக்கம் பார்க்க)

## 7 இராணுவ அதிகாரிகளும் சுகவீன லீவில்!

(கொழும்பு)

பிரிகேடியர், கேர்ணல் தரங்களைச் சேர்ந்த ஏழு இராணுவ அதிகாரிகளும் சுகவீன லீவில் சென்றுள்ளனர்.

1987க்கு முன்னர் வடபகுதியில் கடமையாற்றிய பிரிகேடியர் ஜெயரத்னவும் சுகவீன லீவில் சென்றவர்களில் அடங்குவார்.

# அமைச்சர்களின் குடும்பங்களை ஹோட்டலுக்கு மாற்ற முடிவு!

## பாதுகாப்புக்கு இந்த ஏற்பாடு

[கொழும்பு]

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு அமைச்சர்கள் அனைவரையும் கொழும்பில் இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

அமைச்சர்கள் சிலரின் வேண்டுகோளை அடுத்து ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

அமைச்சர்களுடன் அவர்களது குடும்பத்தினரும் நெருங்கிய உறவினர்களும் இந்த ஹோட்டலில் தங்க அனுமதிக்கப்படுவார்கள்.

## பத்மநாபாவிற்கு பிடியாணை பிறப்பிக்க காரணம் என்ன?
### பாராளுமன்றில் யோகசங்கரி கேள்வி

(கொழும்பு)

''ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி செயலாளர் நாயகம் க. பத்மநாபாவிற்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டதற்கு காரணம் என்ன?'' என்று யாழ். மாவட்ட எம். பி. திரு. க. யோகசங்கரி நேற்று பாராளு

(8ம் பக்கம் பார்க்க)

## அரசைக் கவிழ்க்க இடமளிக்கப்படமாட்டாது!
### சபையில் ரஞ்சன் அறிவிப்பு

(கொழும்பு)

சட்டரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு இடமளிக்கபடமாட்டாது என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். திரு. ரஞ்சன் விஜயரத்ன மேலும் அங்கு பேசுகையில் தெரிவித்ததாவது:-

''1971ம் ஆண்டு பிரதம மந்

(8-ம் பக்கம் பார்க்க)

## 40 நாட்களில் 1090 பேர் கொலை!

(கொழும்பு)

தென்னிலங்கையில் கடந்த நாற்பது நாட்களில் 1090 பேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

பாராளுமன்றத்தில் நேற்று அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணையை சமர்ப்பித்து

(8-ம் பக்கம் பார்க்க)

## ராணுவமுகாம் சுற்றுடலில் மக்கள் நடமாடத் தடை!

[கொழும்பு]

தென்பகுதியில் உள்ள ராணுவ முகாம்களின் முன்னால் போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முகாம்களைச் சுற்றி 100 மீட்டர் தூரத்திற்குப் பொதுமக்கள் நடமாடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முகாம்களுக்கு அண்மையிலுள்ள வீடுகளிலிருந்து குடியிருப்பாளர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

## சமாதானக் குழுவில் முஸ்லிம்காங்கிரஸ்"க்கு இடம் மற்றையகுழு குறித்து முடிவில்லை!

(கொழும்பு)

இந்திய அமைதிப்படை விலகலுக்கான காலக்கெடுவை நிர்ணயிப்பது தொடர்பாக ஆராய்வதற்கென நியமிக்க உத்தேசிக்கப்பட்ட குழுவில் யார் இடம்பெறுவார்கள் என்பது குறித்து முடிவு எடுக்கப்படவில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இத்தகைய குழு ஒன்று அமைக்கப்படும்போது வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள சகல இன மக்களும் பிரதிநிதித்துவம் பெறுவர் என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

புதுடில்லிப் பேச்சுக்களின்

(8-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களுக்கு

அமைச்சர்கள் பொது நிகழ்ச்சிகளில்பங்குபற்றுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு அரசாங்கம் ஆலோசனை தெரிவித்துள்ளது.

## ராணுவ அதிகாரிகள் குடும்பங்கள் பாதுகாப்புத்தேடி வடபகுதி முகாம்களில் !

(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவத்தின் உயர் அதிகாரிகளின் குடும்பங்கள் சில யாழ்ப்பாணப் பகுதிகளிலுள்ள இலங்கை இராணுவ முகாமில் தஞ்சமடைந்திருப்பதாகத் தெரியவருகிறது. (ஐ)

## உடுப்பிட்டியில் மோதல்

(வடமராட்சி)

உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலுக்கு அண்மையில் நேற்றுப் படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

இத்தாக்குதலைத் தொடர்ந்து உடுப்பிட்டிக்கு ஊடாக நடைபெற்றுவரும் போக்குவரத்துகள் யாவும் இடைநிறுத்தப்பட்டன.

இப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

நேற்று முன்தினமும் வல்வெட்டி, இந்து தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அண்மையில் பள்ளவெட்டை என்னும் இடத்தில் மோதல் சம்பவம் ஒன்று நடைபெற்றது (51)

## ஹோட்டலில் குண்டு வெடிப்பு

(கொழும்பு)

கொழும்பு 2ம் குறுக்குத் தெருவிலுள்ள ஹோட்டலொன்றில் நடைபெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் ஊழியர் ஒருவர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன்

(8-ம் பக்கம் பார்க்க)

## ரயில் சேவைகள் முற்றுகஸ்தம்பிதம்!

(கொழும்பு)

ரயில் திணைக்கள ஊழியர்களின்வேலைநிறுத்தம் தொடர்வதால் நேற்றுமுன்தினம் நண்பகலுக்குப் பின்னர் எந்தவொரு ரயில்சேவையும் நடைபெறவில்லை.

கடந்த 4 நாட்களாக சரக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

## நாட்டின் நெருக்கடி நிலை முப்படைத் தளபதிகளை ஜனாதிபதிஇன்றுசந்திக்கிறார்

(கொழும்பு)

மோசமடைந்து வரும் நாட்டின் நெருக்கடி நிலை குறித்து தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா இன்று பொலிஸ் மற்றும் முப்படைத் தளபதிகளுடன் விசேட ஆலோசனை நடத்துகிறார்.

அதிகரித்து வரும் தீவிரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான முக்கிய முடிவுகள் இக்கூட்டத்தில் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## வங்கிக்கட்டளைகள் வரவில்லை
## கையிருப்பிலிருந்தபணத்தில் ஆசிரியர்களுக்கு சம்பளம்!

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வி மாவட்ட ஆசிரியர்களின் சம்பளம் வழங்கப்பட்டுவிட்டது.

ஆசிரியர்களின் சம்பள வங்கிக் கட்டளை, யாழ். கல்வித் திணைக்களத்துக்கு [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

## டீசல் கிடைக்கும்வரை சுழற்சி மின்விநியோகம் இல்லை!

(சுன்னாகம்)

யாழ்ப்பாணத்தில் சுழற்சி முறையில் ஒவ்வொரு பகுதிக்கும் அரை மணி நேரம் வழங்கப்பட்டுவந்த மின்சாரம்

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## பரீட்சை

5-ம் ஆண்டு புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை (எட்டாவது) 27-08-89 ஞாயிறு மு. ப. 10-00 மணிக்கும் பி. ப. 1-30 மணிக்கும் நடைபெறவுள்ளது. பதிவு செய்யவும். நடந்தேறிய பரீட்சை வினாத்தாள்களைப் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், தெங்காதரன் ஆஸ்பத்திரியடி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்

(சி-3265)

## வாடகைக்கு

இந்தியா, சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட மணமகளின் அதிநவீன அலங்கார நகைகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்ள நாடுங்கள். கனகசபை தர்மகுலசிங்கம், கணேச வாசா, வாரி வளவு, காரைநகர், C/o சித்தி தங்க மாளிகை, 213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3228)

## சேவை

அண்ணா கோப்பியின் நல்லூரிலுள்ள விளம்பர நிலையத்தில் அண்ணா கோப்பியை உடனுக்குடன் அரைத்துப் பெற்றுக் கொள்வதோடு ஒரு முருகன் ஸ்ரிக்கரை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஏ- 447

## திருமண சேவை

எம்மிடம் கிறிஸ்தவ சைவ சமய இருமதத்தையும் சேர்ந்த மணமகன் மணமகள் உண்டு. தங்கள் அன்பு செல்வங்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டவர்கள் அவர்களின எதிர் காலத்தை சீரும் சிறப்புடன் அமைக்க எம்மை நாடுங்கள் நிர்வாகிகள்; வின்ரோ மகேந்திரா (சிப்பிலியன்) திரு. முத்தையா இல. 6 நவீன சந்தை மேல்மாடி. (மக்கள் வங்கி கிளைக்கு அருகாமை) யாழ்ப்பாணம். கிளை இல. 17, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3241)

## வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

பச்சிலைப்பள்ளி பல நோ. கூ. சங்கத்தில் 5000 வெற்றுச்சாக்குகள் விற்பனைக்குண்டு. கேள்விப்படிவங்கள் ரூபா 100/- மீளப் பெறும் வைப்பாகச் செலுத்தி சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஏற்கனவே செலுத்தியோர் இம்முறை செலுத்த வேண்டியதில்லை. வெற்றுச்சாக்குகளை சங்க அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். விண்ணப்பங்கள் யாவும் 30-8-89க்கு முன் முத்திரையிடப்பட்ட பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால்உறை இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
பச்சிலைப்பள்ளி
பல நோ. கூ. சங்கம்,
பளை.

(ஏ-449)

## தேவை

பரதநாட்டிய அரங்கேற்றத்திற்குப் பாவிக்கும் 'அரக்கு செற்' உடன் தேவைப்படுகின்றது. பாவித்த 'அரக்கு செற்' வைத்திருப்பவர்களும் தொடர்பு கொள்ளவும். விபரங்களுக்கு: கனகசபை தர்மகுலசிங்கம் C/o சித்தி தங்க மாளிகை, இல. 213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3263)

## வகுப்புகள்

பல்கலைக்கழக சங்கீத விரிவுரையாளர் நடராசா பயிற்றும் பாட்டு: வெங்கடேஸ்வரன், வயலின், மிருதங்கம், நாட்டியம், தட்டச்சு, சுருக்கெழுத்து, பல்கலைக்கழகத்தரம் வரை ஆங்கிலம் கற்பிக்கும் நிபுணர் நிறுவனம்- கலாநிலையம், மாவடிச்சந்தி வட்டுக்கோட்டை. (சி.3266)

## தினம் தினம் அரிசிவிலை உயர்கிறது

(தெல்லிப்பழை)

வலிகாமம் வடக்குப் பகுதியில் அரிசிவிலை தினமும் உயர்கிறது

மின்சாரம் இல்லாத காரணத்தாலேயே அரிசிவிலை உயர்வதாகத் தெரிவிக்கப்பட்டது,

ஒரு கிலோ அரிசி தற்பொழுது 16 ரூபா வரையில் விற்கப்படுகிறது. (76)

## மருந்து வழங்க தனிப் பிரிவு

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை சிகிச்சைக்காக வரும் மனநோயாளர்களுக்கு மருந்து வழங்குவதற்கென அதே இடத்தில் புதிதாக ஒரு மருந்து வழங்கும் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளினிக் நாட்களில் மட்டுமே இப்பிரிவு செயல்படும்

(76)

## காணவில்லை

எனது சொந்தப் பாவிப்பிலிருந்த 86 ஸ்ரீ 8449 இலக்கமுடைய சிவப்பு நிற Econo Power C 70 மோட்டார் சயிக்கிள் K. K. S. வீதியில் காணாமல் போய்விட்டது. இதுபற்றிய தகவல் அறிந்தோர் தயவுசெய்து கீழ்க்குறிப்பிட்ட முகவரிக்கு அறியத்தருப்படி கேட்டுக்கொள்கிறேன்.

**V. குகாதரன் (ஆசிரியர்)**
**NEW MASTER INSTITUTE,** B. M C. LANE, JAFFNA. (ஏ 450)

## அறிவித்தல்

காரைநகர் — யாழ்நகர் கலாசாலை
பழைய மாணவர் சங்க

### வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் 1989-09-03-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் கல்லூரியின் பழைய மாணவ மாணவிகள் சகலரையும் தவறாது பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதுவரை உறுப்பினர்களாக சேர்ந்துகொள்ளாத பழைய மாணவ மாணவிகள் சகலரும் தலைவர் அல்லது செயலாளருடன் தொடர்பு கொண்டு உறுப்பினர்களாக சேர்ந்துகொள்ளுமாறு பணிவன்புடன கேட்டுக்கொள்கின்றோம்.

சோ. விக்னேஸ்வரன்,
செயலாளர்.

1989-08-25.

(சி-3260)

## DIPLOMA IN HOME ECONOMICS

| | |
|---|---|
| CAKE ICINC | FLOWER-MAKING |
| COOKERY | HANDI-CRAFT |
| NEEDLE WORK | GLASS & FABRIC PAINTING |
| HAIR - STYLING | கோலங்கள் |

பயிற்சிக் காலம் 6 மாதங்கள்

பயிற்சியின் முடிவில் ''Diploma in Home Economics', தகமைச் சான்றிதழும் ஒவ்வொரு பாடங்களின் திறமைகளுக்கேற்ப பிரத்தியேக திறமைச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**பயிற்சிகள் ஆரம்பம் 01-09-89**

தொழில் புரியும் பெண்களின் வசதிக்காக ஞாயிற்றுக்கிழமை வகுப்புக்களும் 10-9-89 முதல் ஆரம்பமாகின்றன.

விபரங்கட்கு:

**கலாலயா**

(மனையியல், நுண்கலை நிறுவனம்)
விக்டோரியா வீதி,
(ஹோட்டல் சுபாஸ் அருகாமை)
யாழ்ப்பாணம்.

(சி-3264)

## அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

### பகிரங்க ஏலவிற்பனை

எமது யாழ்ப்பாணம் மரக்காலையில் உள்ள ஏழு (07) மலை வேம்பு குத்தி மரங்கள் (Mahogany Logs) 121 கன அடி 1989-09-15-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் என்னால் விற்பனை செய்யப்படும். ஏலத்தில் வாங்க விரும்புவோர் ஏலத்தில் விடப்படும் மரங்களை முன்கூட்டியே பார்வையிடலாம். மேலதிக விபரங்கட்கு யாழ்ப்பாணம் மரக்காலைப் பொறுப்பதிகாரியுடனோ அல்லது எம்முடனோ தொடர்பு கொள்ளவும்.

பிரதேச முகாமையாளர், வடபிராந்தியம்,
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(ஏ-448)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர் பெரியதம்பி சுப்பிரமணியம்
(பதில் செயலாளர், பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை)



தோற்றம்:
14-11-1933

மறைவு:
26-07-1989

கடமைக்கு வரும் வழியில் அகால மரணமடைந்த வைத்தியசாலை பதில் செயலாளர் அமரர் பெ. சுப்பிரமணியம் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள்.
பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை.

(சி 3232)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்: 11-5-1911

மறைவு: 27-7-1989

அமரர் சி. க. குமாரசாமி

(மக்மிலன் புத்தகசாலை ஆரம்ப முகாமையாளர்)

திங்களொன்று சென்றதையா தேறமுடியவில்லை குடும்பத் தீபமே! அன்பின் தெய்வமே எங்கு சென்றாய், எங்களின் உள்ளத்துடிப்பு உள்ளவரை உங்கள் நினைவு எங்களைவிட்டு நீங்காதையா. எத்தனை கற்பனைகள் உள்ளத்தில் உதித்தனவோ. இத்தனையும் நிஜமாகும் வேளையிலே நித்தமும் கண்ணீரை விழிதனிலே நிறைத்துவிட்டு துலங்குகின்ற ஜோதியாக ஒளியேற்றிச் சென்றீரே.

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்து மீளாத் துயில்கொண்ட எமது தந்தையாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

27-7-1989ல் நடைபெற்ற இறுதிக் கிரியைகளில் பல்வேறு கஷ்டங்கள் மத்தியில் கலந்துகொண்டும் கடிதமூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், பல்வேறு விதங்களில் உதவிய யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நயினாதீவில் 26-8-89ல் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,

மக்கள், மருமக்கள், பேரக்குழந்தைகள்

நயினாதீவு-7

(சி-3267)

# ஹிட்லர் - ஸ்டாலின் ஒப்பந்தத்தை எதிர்த்து சோவியத்தில் 20 லட்சம் பேர் ஆர்ப்பாட்டம்!

## 50-வது நினைவு தினத்தில் 400மைல்மனிதசங்கிலிஎதிர்ப்பு

(மாஸ்கோ)

50 ஆண்டுகளுக்கு முன் ஹிட்லரும், ஸ்டாலினும் செய்துகொண்ட இரகசிய ஒப்பந்தத்திற்கு எதிராக 20 லட்சத்திற்கும் அதிகமான சோவியத் மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

எஸ்ரோனியா, லித்ரோனியா, லக்ருனியா ஆகிய மூன்று சோவியத்குடியரசுகளிலும் லட்சக்கணக்கான மக்கள் வீதியின் இரு மருங்கிலும் கைகளைக் கோர்த்த வண்ணம் மனித சங்கிலி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சுமார் 400 மைல் தூரம் தமது கைகளைக் கோர்த்து நின்ற பெண்கள், குழந்தைகள் உட்பட 20லட்சம் மக்கள் தேவாலயங்களின் மணிஓசை தொடர்ந்து ஒலிக்க தேசிய கீதங்களைப் பாடினர் என்றும் இவர்கள் காலை 7 மணியிலிருந்தே கறுப்புப்பட்டி அணிந்து தேசியக் கொடிகளைத் தாங்கி நின்றதாகவும் அறிவிக்கப்பட்டது.

ஜெர்மன் தலைவர் அடோல்ப் ஹிட்லரும் சோவியத் தலைவர் ஸ்டாலினும் 1839ம் ஆண்டு செய்துகொண்ட இரகசிய ஒப்பந்தத்துக்கமைய பால்டிக் மாகாணம் சோவியத் யூனியனுடன் சேர்க்கப்பட்டதை எதிர்த்தே அந்த ஒப்பந்தத்தின் 50வது வருட நினைவு நாளில் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**மாஸ்கோவிலும்**

சோவியத் தலைநகரான மாஸ்கோவிலும் நூற்றுக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம் செய்ததாகவும் ஆர்ப்பாட்டத்தைக் கலைத்த பொலிசார் 75 பேரைக் கைதுசெய்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

## மொரார்ஜி தேசாயை 78-ல் கொல்ல முயன்றாராம்

### ஆஸி. பிரஜை ஒப்புக்கொள்கிறார்

(சிட்னி)

11 ஆண்டுகளுக்கு முன் இந்தியப் பிரதமராக இருந்த திரு. மொரார்ஜி தேசாயைக் கொலை செய்யத் தாம் முயந்சித்ததாக ஆஸ்திரேலியப் பிரஜை ஒருவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

1978ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ம்திகதி திரு தேசாய் சிட்னியில் உள்ள ஹில்டன் ஹோட்டலுக்கு வரும்போது ஹோட்டலின் வாசலில்குண்டு ஒன்றை வெடிக்க வைப்பதன் மூலம் அவரைக் கொலைசெய்ய தாம் முயற்சித்ததாக 33 வயதான இவன் பெடரிக் ஒப்புக்கொண்டுள்ளார்.

'ஆனந்த மார்க்கம்' என்ற இந்திய சமய அமைப்பின் அங்கத்தவரான இவர், மேற்கொண்ட இம்முயற்சியின் போது, குண்டு தவறுதலாக வெடித்து பொலிஸ்காரர் ஒருவரும், ஹோட்டல் தொழிலாளிகள் இருவரும் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஆப்கான் அதிபரின் அமைதித் திட்டம் நிராகரிப்பு

(காபூல்)

ஆப்கான் கிளர்ச்சிக் காரர்கள் போர் நிறுத்தம் ஒன்றைக் கடைப்பிடித்தால் ஆறு மாதத்திற்குள் பொதுத்தேர்தல் நடத்தப்படும் ஆப்கான் பிரச்னை தொடர்பாக சோவியத்யூனியன, அமெரிக்கா, இந்தியா, சீனு, பாகிஸ்தான், ஆப்கான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் சர்வதேச மகாநாடு ஒன்று கூட்டப்படவேண்டும்.

மேற்கண்ட இரு கோரிக்கைகள் உட்பட்ட ஆப்கான் அதிபரின் அமைதித் திட்டத்தை ஆப்கானிஸ்தான் கிளர்ச்சிக் காரர்கள் நிராகரித்து விட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தம்மால் ஏர்கனவே நிராகரிக்கப்பட்ட திட்டம் போன்றதே இது என்றும் புரட்சிக் காரர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் ஆப்கானிஸ்தான் கிளர்ச்சிக்காரர்கள் தொடர்ந்து முக்கிய நகரங்களின் மீதுகுண்டுத் தாக்குதல் நடத்து வருகின்றனர் என்று அதிபர் டாக்டர் நஜிபுல்லா தெரிவித்துள்ளார்.

## பிரான்ஸ் விமானக்கடத்தல் முயற்சி முறியடிப்பு!

(அல்ஜியர்ஸ்)

115 பேருடன் பிரான்ஸ் விமானத்தைக் கடத்தமுயன்ற ஒருவர் அல்ஜியர்ஸ் விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டார்.

102 பயணிகளுடனும், 13 விமானச் சிப்பந்திகளுடனும் பாரிஸிலிருந்து அல்ஜியர்ஸ் சென்று கொண்டிருந்த 'எயர் பிரான்ஸ்' விமானத்தை அல்ஜியர்ஸைச் சேர்ந்த 30 வயதான வென்ட் தாதா என்பவர் கடத்த முயன்றதாகவும் அல்ஜியர்ஸ் விமான நிலையத்தில் விமானம் இறங்கியதை அடுத்து அந்த தனிநபர் கைது செய்யப்பட்டதாகவும்அறிவிக்கப்பட்டது.

லெபனுன் குறித்த சர்வதேச மகாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே இவ்விமானம் கடத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப் பட்டதாகவும் கூறப்படுகிறது.

## கொலம்பியா நீதிபதிகள் வேலைநிறுத்தம் முடிவுற்றது

### 11, 000 போதைவஸ்து கடத்தல்காரர் கைது

(பொகோடா)

போதைவஸ்து கடத்தல் காரரின் வன்முறை, கொலைகளையடுத்து 2 வாரமாக வேலை நிறுத்தம்செய்துவந்தகொலம்பியா நீதிபதிகள் தமதுவேலை நிறுத்தத்தைக் கைவிட்டுள்ளனர்.

அதிகமெய்க்காப்பாளர்கள், குண்டு துளைக்காத கார்கள் உட்பட கூடுதல் பாதுகாப்பு வழங்குவதாக அரசாங்கம் உறுதி கூறியதை அடுத்தே நீதிபதிகள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இதேவேளையில் அமெரிக்காவில தேடப்படும் நான்கு பெரும் போதைவஸ்து புள்ளிகள் உட்பட 11 ஆயிரம் கடத்தல்காரரையும், வன்முறையாளர்களையும் கொலம்பியா அரசாங்கம் கைதுசெய்துள்ளதாக அறிவித்துள்ளது.

## மோதலைத் தொடர்ந்து பதற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் - பருத்தித்துறை வீதியில் ஆவரங்கால் சிவன் கோவிலடியில் கடந்த புதன்கிழமை மோதல் சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவத்தினுல் யாழ்- பருத்தித்துறை வீதியில் வாகனப் போக்குவரத்து சிலமணி நேரம் தடைப்பட்டது.

தொடர்ச்சியாகக் கேட்ட துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களினுல் ஆவரங்கால், புத்தூர். அச்சுவேலிப் பகுதியில் பதற்றம் நிலவியபோதிலும் சில மணி நேரத்தில் நிலைமை வழமைக்கு திரும்பியது. (74)

## 30-ம் திகதி ஹர்த்தால்

## அலுவலகத்தில் முதல்நாள் தங்கவும் அனுமதிக்கப்படும்

### இந்திய மத்திய அரசு அறிவிப்பு

(புதுடில்லி)

இந்தியா முழுவதும் இம் மாதம் 30ம்திகதி எதிர்க்கட்சியினர் நடத்தவிருக்கும் ஹர்த்தால் தினத்தன்று வேலைக்கு வராத அரசாங்க ஊழியர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

போக்குவரத்து சீர் குலைவு என்று காரணம் காட்டி எவரும் வேலைக்கு வராமல் விடக்கூடாதென்றும் சகல அமைச்சுகளுக்கும் அனுப்பியுள்ளசுற்று நிருபத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஹர்த்தால் தினத்திற்கு முன்தினமே அலுவலகங்களில் தங்கியிருக்க விரும்புபவர்களுக்கு வசதிசெய்துகொடுக்கப் படுமென்றும் மத்திய அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மாணவர் ஆசிரியர் சிரமதானம்

(உடுவில்)

கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் அதிபர் திரு. சேது. இராசவல்லவனின் வேண்டுகோளை ஏற்று மேற்படி கல்லூரியின் பழைய மாணவர்களும், ஆசிரியர்களும்சிரமதானமூலம் கல்லூரி வளவைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டனர். சிரமதானப்பணியில் ஈடுபட்டவர்களுக்கு ஸ்கந்தா ஆசிரிய மன்றமும், நலன்விரும்பிகள் சிலரும் சிற்றுண்டி, தேநீர் வழங்கினர். (109)

## பதற்றத்தைத் தொடர்ந்து வெறிச்சோடியது!

(பருத்தித்துறை)

பருத்தித்துறை புலோலிப் பகுதியில ஹெலிகாப்டர் ஒன்று பலதடவைகள் தொடர்ந்து வட்டமிட்டதை அடுத்து பருத்தித்துறை புலோலிப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

மக்கள் பெரும் அச்சமடைந்தனர். இதனையடுத்து பருத்தித்துறை, புலோலிப் பகுதிகள் வெறிச்சோடின. வாகனப்போக்குவரத்துக்களும் சிலமணிநேரம் ஸ்தம்பித்தன. எனினும் எந்தவிதமான அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை. (52)

## 5,600 இறுத்தல் எடையுள்ள அமெரிக்க விண்கலம் இந்தியா, தென் கிழக்கு ஆசியாவில் பூமியில் விழும்?

(நியூயோர்க்)

அமெரிக்காவின் செயலிழந்த விண்கலம் ஒன்று இவ்வாண்டு நவம்பரில் பூமியில் விழும் என்றும் அதனைச் சீர்செய்வதற்காக மற்றுமொரு விண்கலத்தை அனுப்பும் முயற்சியில் அமெரிக்க விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளதாகவும் அமெரிக்க 'சஞ்சிகை' ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த விண்கலம் சீர் செய்யப்படாவிடின் இதன் 2540 கிலோ எடையுள்ள சிதைவுகள் 430 துண்டுகளாகப் பூமியைத் தாக்கும் என்றும் அந்த சஞ்சிகை மேலும் தெரிவித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

ஒரு பஸ்ஸின் அளவிலான 1கோடி 40 லட்சம் ரூபா பெறுமதியான இந்த விண்கலத்தின் சிதைவுகள் தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, இந்தியா, தென் கிழக்காசியா ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலேயே விழலாம் என்று விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றனர்.

இது டிசம்பர் மாதத்திலேயே விழலாம் என ஏற்கனவே எதிர்பார்க்கப் பட்டபோதிலும் இப்போது அக்கலம் நவம்பரில் விழலாம் எனக் கருதப்படுகிறது.

## மோதலில் வீடு தீக்கிரை

(பருத்தித்துறை)

அல்வாய் நாவலடியில் அண்மையில்ஏற்பட்டமோதலைகளையடுத்து வியாபாரிமூலை வீரபத்திரப் பெருமான் ஆலய குருக்களின் வீடும் தீக்கிரையாகியுள்ளது. இக்குருக்களின் வீடு ஆலய வீதியில் அமைந்துள்ளது. (52)

### மணிவாக்கு

பிரிய ஆத்மனே! விளக்கெண்ணெய் வழிய முகத்தை வைத்துக்கொள்ளாதே. உன்னுடைய துயரத்தை வெளியிடாதே. நீ துன்பநிலைக்கு அப்பாற்பட்டவன். நீ ஆனந்த சொரூபி.

— சுவாமி சிவானந்தா.

# நமது நோக்கு

## தண்ணீர்! தண்ணீர்!!

**த**ண்ணீர்த் தட்டுப்பாடு பல பகுதிகளில் நிலவுவதாகவும் அதனுல் மக்கள் நீண்ட தூரங்களுக்குக் குடிநீர் தேடி அலைகின்றனர் எனப் பல செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

பட்ட காலிலே தான் படும் — இது பழமொழி அல்ல. இன்றைய அனுபவ மொழியாகின்றது. கிணறுகள் வரண்டு போவதால் ஏற்படும் குடிநீர்ப் பிரச்னை ஒருபுறம்; கிடைக்கும் நீரையே விநியோகிக்க முடியாதிருப்பது இன்னேர் பிரச்னை. காரணம் என்ன? மின்சாரம் தடைப்பட்டதால் நீர் வழங்கும் ஒழுங்குகள் தடைப்பட்டுள்ளன. தண்ணீர் கைக்கும் எட்டவில்லை; வாய்க்கும் எட்டவில்லை!

குடிநீர்ப் பற்றுக்குறை ஏற்பட்ட சில இடங்களில் தொட்டிகள் கட்டி, மின்சார இயந்திரங்கள் மூலம் நீரிறைக்கப்பட்டு, குழாய்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வந்தது. மின்சாரத் தடையால், தொட்டிகளுக்கு நீர் நிரப்ப முடியவில்லை. இதற்கு மாற்றுவழி என்ன? ஏற்கனவே சில பகுதிகளில் நடைமுறையில் உள்ளதுபோல, ''பௌசர்கள்'' மூலம் அல்லது கொள்கலன்கள் மூலம் நீர் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

மின்சார மோட்டர்களை நம்பி, குழாய்க் கிணறுகள் நிறுவியவர்களும் தற்போதைய மின் தடையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மலிவான முறையில் கைப்பம்புகள் ஆக்குவதற்கு நல்லூரில் உள்ள பொருத்தமான தொழில்நுட்ப நிறுவனம் சில ஆய்வுகளைச் செய்ததாக அறிகிறோம். அந்த ஆய்வுகளின் அடிப்படையில் மலிவாகச் செய்யப்படும் மனிதசக்தியால் இயங்கும் கைப் பம்புகள் இத்தகைய நெருக்கடி நிலையில் கைகொடுத்து உதவும் என்பதை வலியுறுத்திக் கூறவிரும்புகிறோம்.

''தண்ணீர் தண்ணீர் எங்கும் உள்ளது; குடிக்கத்தான் சொட்டு நீரும் இல்லை!'' என்று ஒரு ஆங்கிலக் கவிஞன் பாடினன். அக் கவிஞன் கருத்து விஞ்ஞான ரீதியானது என இன்று நாம் ஏற்றுக்கொள்ளவேண்டியுள்ளது. ஏன்? புவியின் மீதுள்ள முழு நீரையும் கணக்கில் எடுத்தால் 97.2 வீதம் கடல் நீர்; இது மனிதத் தேவைக்கோ, பயிர்ச் செய்கைக்கோ உதவுமா? மீதியான 2.8 சத வீதத்திலே 2.15 சத வீத நீர் துருவப் பிரதேசங்களிலே பனிக் கட்டியாக உள்ளது; 0.31 வீதம் புவியின் அடிக்குப் போய்விடுகிறது. மக்களுக்குக் கிடைப்பது எவ்வளவு? 0.34 சத வீதமே.

இப்படி அருமையாகக் கிடைக்கும் நீரையும் கவனமாகப் பேணிக் காக்கின்ருேமா? மழை பெய்யத் தொடங்கியதும் நனைவதையும் பொருத்தாது சிலர் செய்யும் 'நற்கருமம்' என்ன? வளவிற்குள் வெள்ளம் நிற்கக்கூடாது எனக் கூறிக்கொண்டு, வாய்க்காலை வெட்டிவிடுகிருர்கள்; தெருக்களிளே வாய்க்கால்கள் அமைத்துவிடுகிருர்கள்.

நீரைத் தேங்கவிட்டால், கசிந்து, நிலத்திற்கடிக்குச் சென்று, கோடைகாலத்தில் கிணறுகளை வற்ருமல் இருக்க உதவும் என்பதைப் பலர் மறந்துவிடுகிருர்கள். வெயில் அதிகம் உள்ள வேளைகளில் தோட்டங்களுக்கு இறைப்பதால், நீராவி மூலம் இழப்பு ஏற்படுவதை எத்தனை விவசாயிகள் சிந்திக்கின்ருர்கள்? மழைகாலம் ஆரம்பிக்கும் போதே, வயல்களைத் தயாராக்கி வைத்தால், மழைநீரின் உச்சப் பயனைப் பெற்றுவிடலாம். பயிருக்கு நீர் தேவைப்படும் காலங்களை அறிந்து அதற்கேற்றவாறு நீரைப் பயன்படுத்த விவசாயிகள் அறிந்திருக்க வேண்டிய தன் அவசியத்தையும் சுட்டிக்காட்டவிரும்புகிறோம்.

பெருஞ்செலவில், நகர்ப்புறங்களிலே, குழாய்மூலம் விநியோகிக்கும் நீரை வீணுக்காது பேண, நமது மனப்போக்கு மாறவேண்டும். கவனக் குறைவால் நீர்த்திருகுபிடிகளைத் திறந்துவிடுதல், பழுதடைந்து, நீரை வீணுக்கிக் கொண்டிருக்கும் பைப்புகளைப் பற்றி உடன் உரியவர்களுக்கு அறிவியாதிருத்தல் போன்ற பொறுப்பற்ற கருமங்களை நாம் கண்டிக்கவேண்டும்

# தமிழ்மொழி அமுலாக்கலின் உண்மை நிலையும் தமிழ் அரச ஊழியரின் அவலமும்

கடந்த 21-9-89ந் திகதிய 'ஈழநாடு' இதழில் மக்கள் கருத்துப் பகுதியில் அரச ஊழியர்களின் மொழிப் பிரச்னை தீராதா' என்ற தலைப்பில் வெளியான கடிதத்தைப் பார்த்தேன் அதில் கூறியவை உண்மையானவை.

இலங்கை – இந்திய உடன்படிக்கையின் கீழ் தமிழ் இலங்கையில் அரசகரும மொழியாக்கப்பட்டு விட்டதாக இந்திய, தமிழ்நாட்டு தொடர்பு சாதனங்களிலும் குறிப்பாக சென்னை வானெலி நிலயத்திலிருந்து ஒலிபரப்பாகும் 'நேசக் கரங்கள்' 'அன்புவழி' ''வெற்றிமாலை'' நிகழ்ச்சிகளிலும் அடிக்கடி பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. ஆனுல் உண்மையில் நடப்பதென்ன என்பதை திரு. செல்லையா அவர்களின் கடிதம் பிட்டுக் காட்டியுள்ளது. இவை பற்றி வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்கத்தை அமைத்துள்ள ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் இலங்கைப் பாராளுமன்றத்தில் 3வது பெரிய கட்சியாக உள்ள ஈழவர் ஜனநாயக முன்னணியும் தமிழ் பொதுமக்களுக்கு என்ன சொல்லப் போகிறார்கள்? தமிழ் அரசகருமமொழி என்பது சட்டத்தில் மட்டுமே உள்ளது. அது அமுல் நடாத்தப்படுவதில்லை. கடந்த 40 ஆண்டுகால பாராளுமன்ற அரசியல்அனுபவங்களிலிருந்து தமிழ்மொழி நிர்வாக மொழியாக அமுல் நடாத்தப்படும் என்ற நம்பிக்கையும் இல்லை.

இலங்கை-இந்திய ஒப்பந்தப்படி தமிழ் இலங்கையின் அரச மொழியாக்கப்பட வேண்டும் என்ற விதிக்கு ஏற்று அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டம் 1987 நவம்பர் வரையில் பாராளுமன்றத்தில் ஏற்கப்பட்டது அதில் மாகாண சபை அமைக்கவும், தமிழை அரசமொழியாக்கவும் சட்டம் கொண்டு வரப்பட்டது பின்னர் சரியாக ஓராண்டு கழிந்த பின்னர் அரச பதவியிலிருந்து விலகுவதற்கு முன்னர் 1988 ஒகடோபர் 18 தமிழை அரச மொழியாக்கும் 16வது அரசியலமைப்பு திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது இதில் பல ஓட்டைகள் உள்ளன என்பதை கலாநிதி நீலன் திருச்செல்வம் தாம் எழுதிய 'தமிழ் பிரதேச மொழியா அல்லது நாடு முழுவதும் அரசு மொழியா' என்ற கட்டுரையில் கேள்வி எழுப்பியுள்ளார். இந்த 16வது திருத்தச்சட்டப்படி 22 (1) பிரிவின் படி வடக்கு கிழக்கு மாகாணத்தில் மட்டும் நிருவாக மொழி தமிழ்.

இதைக்கூட வடக்குகிழக்கு மாகாணசபை நடைமுறைப் படுத்தாமல் தன் அலுவல்களை ஆங்கிலத்தில் நடத்தி வருகிறது. ஏனைய மாகாணங்களில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தமிழர்கள் கூடுதலாக இருந்தால் தமிழ் நிர்வாக மொழி சிங்களவர் கூடுதலாக இருந்தால் சிங்களம் நிர்வாக மொழி எனக் கூறப்பட்டுள்ளது.

# மக்கள் கருத்து

(உதாரணமாக திருகோணமலையில் உள்ள ஓர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சிங்களவர் கூடுதலாக இருந்தால் சிங்களத்தில் மட்டுமே அலுவல் நடககும் இதுதான் உண்மை நிலை. எனவே இலங்கை முழுவதும் தமிழ் சிங்களத்துடன் சரிநிகர் சமானமான அரச மொழியாக அங்கீகரிக்கப்படவில்லை. அத்துடன் தமிழை அரசாங்க அலுவலகங்களில் நிருவாக மொழியாக அமுல் நடத்த பொது நிர்வாக அமைச்சு 18-4-89ந்திகதி 25-89ம்இலக்க சுற்றறிக்கை வெளியிட்டது. இந்தச் சுற்றறிக்கை போதுமானதல்ல. அப்படியிருந்துர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல அரசாங்க அலுவலகங்களும் கச்சேரிகள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள், வங்கிகள் எல்லாம் தொடர்நதும் ஆங்கிலமொழியிலேயே தம்நாளாந்தக் கடமைகளைச் செய்துவருகின்றன. ஏனைய மாகாணங்களில் உள்ள நிலை தெரிந்ததே. ''தமிழில் கடமையாற்ற தட்டெழுத்துப் பொறிகள் இல்லை, தமிழ் தட்டெழுத்தாளர் இல்லை. அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கநிதிஒதுக்கீடு இல்லை'' என்று அதிகாரிகள் சாக்குப் போக்குச் சொல்லி தட்டிக் கழித்து வருகின்றனர். இதில் உண்மையும உண்டு. ஆனுல் ஏனைய உத்தியோகத்தர்கள் தமிழில் தம்கடமைகளைச் செய்ய தடையாயிருப்பது என்ன என்பது விளங்கவில்லை.

நிற்க, தமிழ் அரசாங்க ஊழியர்களின பரிதாப நிலையைப் பார்ப்போம. 07-07-89 இல் வெளிவந்துள்ள அரசாங்க வர்த்தமானியில் பதவி வெற்றிட விளம்பரத்தைப் பார்த்தால் இதுநன்கு புலப்படும். தமிழ் அரசகருமமொழிஎன 16-வது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னரும், தமிழ்மொழிமூலம் சேர்ந்த அரசஊழியர்கள் தம்பதவிகளில் உறுதிப்படுத்தப்படவும், தங்கள் வருடாந்தச் சம்பள உயர்வினைப் பெறவும், பதவி உயர்வுக்கும் சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டுமென வலியுறுத்தப்பட்டு வருகிறது. 1956-ம் ஆண்டின் 33-ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்திற்கமைய இந்நிபந்தனைகள் விதிக்கப்பட்டுளளன. இந்த நிபந்தனைகள் திறைசேரியால் 04 - 09 - 1966 -ம் ஆண்டில் வெளியிடப்பட்ட 701-ம் இலக்க 2/9/156/26 (அ) சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. நீங்கள் விரும்பினுல் யாழ். கச்சேரி நிர்வாககிளையில் இச் சுற்றறிக்கையைப் பார்வையிடலாம்.

1988 ஒக்டோபர் 18 ந் திகதி தமிழ் அரசகருமமொழிஎன 16-வது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டு 9 மாதங்

(6ம் பக்கம் பார்க்க)

# இஸ்லாமிய சிந்தனை

இப்னு ஆதம்

## ஏழையாகவே வாழுங்கள்!

''இறைவனே! நீ என்னை ஏழையாகவே வாழச் செய்து, ஏழையாகவே மரணிக்கவும் செய்து, ஏழைகளின் கூட்டத்தில் என்னை (மறுமையில்) எழுப்புவாயாக!'' என்று பெருமானுர் (ஸல்) அவர்கள் வேண்டிக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது ஆயிஷா (ரலி) அவர்கள் 'நாயகமே! எதற்காக' என்று வினவினுர்கள். அதற்கு அவர்கள்;

''நிச்சயமாக, ஏழைகள் செல்வந்தர்களைவிட நாற்பது ஆண்டுகளுக்கு முன்னதாகவே சுவனபதி சென்றுவிடுவர் ஆயிஷாவே! (யாசிக்க வரும்) ஏழையை (உம்மிடம்) ஒரு துண்டு பேரீச்சம்பழம் இருப்பினும் சரியே (அதை அவருக்கு அளிக்காமல்) திருப்பி விடாதீர் ஆயிஷாவே! ஏழைகளை நேசித்து, அவர்களை (உன்பால்) நெருங்கச்செய்யும். அல்லாஹ் உம்மைத் தன்பால் நெருங்கச்செய்வான்'' என்று பெருமானுர் (ஸல்) அவர்கள் கூறினுர்கள்.

அறிவிப்பவர்: அனஸ் (ரலி) ஆதாரம்: திர்மிதீ.

(இன்று நல்லைக் கந்தன் 20-ம் திருவிழா)

## வெற்றி தரவே வருக

ஆறு படைக்கும் வீடு அமைத்து
அமர்ந்த சுரபூ பதியே
கூறு படுத்திச் சூரை அழித்துக்
கோழியும் மயிலாய் நின்ருய்
தேறு தலுக்காய் உன்னைத் தேடித்
தேடி அலையும் எவர்க்கும்
வீறு படைக்கும் நல்லூர் கந்தா
வெற்றி தரவே வருக

—நயினைக் கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை

## மதில் சூழும் நல்லைக் கந்தா!

தெய்வி யிடமிருக்கத் தேசுமயின் மீதிவர்ந்து
உய்விப்பாய் எங்களையே எப்பொழுதும்- நெய்கமழும்
நல்லூர் குடிகொண்ட நல்ல தமிழ்க் குமரா!
நல்ல உயர்வளிப்பாய் நாளும்

அரியமா னுடப்பிறவி எடுத்து விட்டோம்
அல்லலெனும் ஆழியில்யாம் அமிழ்ந்து விட்டோம்
பெரியவொரு திமிங்கிலம்வாய் பட்டு விட்டோம்
பேரிடருள் சிக்கியே பெயர்ந்து விட்டோம
சுயதிரு மான்மருகா! கருணை மிக்கோய்!
கரம்பரத்துள் நின்றெமையுங் கரைசேர்ப் பிப்பாய்
பெரியவுயர் மதில் சூழும் நல்லைக் கந்தா!
பேருர்ந்த உனதருளைப் பொழிகு வாயே!

—வெண்பாமணி முருகசூரியன்

# பலதும் பத்தும்

### களை கொல்லிகள்?

யார் இந்தக் கிறீன் (Green) இயக்கத்தினர்! நச்சுப்பொருள்களால் சூழல் மாசடைதல் போன்ற பல்வேறு பிரச்னைகளைக் கிளப்பிக் கொண்டிருப்பவர்கள். மேற்கு நாடுகளில் இவர்கள் தொகை அதிகரித்து வருகின்றது. விஞ்ஞான ஆய்வாளர்களின் கருத்துக்களும் அவர்களுக்கு ஆதரவைத் தந்துகொண்டிருக்கின்றன.

ஒரு உதாரணம் – களை கொல்லிகளைப் பயன்படுத்தும் பிரதேசங்களில் தாய்ப்பால் ஊட்டும்போது சில இரசாயனப் பொருள்கள் குழந்தைகளுக்கு உட்செல்கின்றது என்பதை ஏற்கனவே கண்டுபிடித்துள்ளார்கள். வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகளில் களை கொல்லிகளின் பாவிப்பில் அவதானம் வேண்டும்.

மேற்கு ஜேர்மனியிலே மான்ஹெறயிம் பல்கலைக் கழகத்தில் ஆய்வு தொடர்ந்தது கருவிலிருக்கும் குழந்தைகளையே இந்த நச்சுப் பொருள்கள் பாதிக்கும் எனப் பேராசிரியர் ரியூபெல் தெரிவித்திருக்கின்ருர்,

எமது பகுதியிலே, களை கொல்லிகள், கிருமிநாசினிகளின் தவருன பாவிப்பால் பலருக்குக் கேடு விளைந்ததை நாமறிவோம். அவற்றின் பாவிப்பில் கட்டுப்பாடும் வேண்டும்; கவனமும் வேண்டும். கண்காணிப்பும் வேண்டாமோ?

வாணி

### மின் தடையால்

# யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று தண்ணீர்க் கஷ்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனு வைத்தியசாலையில் நேற்று மின்சாரம் இல்லாத காரணத்தினுல் நோயாளர்களும் பணியாளர்களும் தண்ணீர்இன்றி பெரும் அவதியுற்றனர்.

ஆய்வு கூடப் பணிகள் கூட இதனுல் பெரிதும் பாதிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரியில் உள்ள தண்ணீர் தாங்கியில் 55 ஆயிரம் கலன் நீரைச் சேமித்துவைக்க முடியும். அதுவும் தினமும் மூன்று தடவைகள் நிரப்பப்பட்டு ஆஸ்பத்திரித் தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது. ஆனுல் நேற்று மின்சாரம் தொடர்ச்சியாக இல்லாததினுலேயே இக்கஷ்டம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. (5)

# ‘அப்பாவி பிக்குகளை விடுதலை செய்க’

## ரஞ்சனிடம் கோரிக்கை

[கொழும்பு]

“அண்மைக்காலமாக கைது செய்யப்பட்டு எதுவித குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படாமல் இருக்கும் சகல பௌத்த பிக்குகளையும் விடுதலை செய்யவும்.”

இவ்வாறு கண்டி மல்வத்தை மகாவிகாரை பிக்குகள் சங்கம் பாதுகாப்பு அமைச்சர் திரு ரஞ்சன் விஜயரத்னவை கோரியுள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலும் பௌத்தபிக்குகள் தொடர்ந்து கைது செய்யப்படுவதாக தமக்குத் தினமும் அறிவிக்கப்படுவதாகவும் அவ்வாறு கைது செய்யப்படுபவர்களில் அப்பாவிகளை உடன் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். பல்கலைக்கழக மாணவன் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவன் பி. ஸ்ரான்லி நேற்றுக் காலை விடுதலை செய்யப்பட்டார்.

இவரது விடுதலையை அடுத்து வகுப்புகளைப் பகிஷ்கரித்த யாழ். பல்கலைக்கழக 3ம், 4ம் வருட மாணவர்கள் நேற்று நண்பகல் ஒரு மணிக்குப்பின தமதுபகிஷ்கரிப்பைக்கைவிட்டு விரிவுரைகளில் கலந்துகொண்டனர். (ஐ)

## பருத்தித்துறை, புலோலி, நெல்லியடி சில கடைகள் திறந்திருந்தன

## மக்களிடையே தொடர்ந்து பதற்றம்!

(பருத்தித்துறை)

பருத்திததுறை, புலோலி, நெல்லியடிப்பகுதியில் நேற்று சில கடைகள் திறக்கப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்துக்கள் இடம்பெற்றன. பருத்தித்துறை இலங்கைவங்கியில் பணக்கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெற்றன.

பருத்தித்துறை, கரவெட்டி, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்கஅதிபர் அலுவலகங்களும் இயங்கின. மக்கள் பதற்றத்துடன்யே நடமாடியதைக் காணக்கூடியதாக இருந்தது. நேற்றுமுன்தினம் நண்பகல் பருத்தித்துறை, புலோலிப் பகுதிகளில் ஹெலிகொப்டர் தொடர்ந்து வட்டமிட்டது. (52)

## யாழ்ரன் கல்லூரி அதிபர்

(பண்டத்தரிப்பு)

காரைநகர் யாழ்ரன் கல்லூரியின் அதிபராக அக்கல்லூரியின் உப அதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ். சேனுதிராசா நியமிக்கப்பட்டுள்ளார். (72)

## நியமனம்

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் கொத்தணி அதிபராக பரந்தன் மகாவித்தியாலய அதிபர் திரு. ம. பரமநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். உருத்திரபுரம் கொத்தணி அதிபராகக் கடமையாற்றிய திரு. பொன். சபாபதி கிளிநொச்சி மாவட்ட கல்வித் திணைக்களத்தில் கல்வியதிகாரியாகப் பதவியேற்றுள்ளார். (83)

## முதுகலைமாணி

(பருத்தித்துறை)

தென்புலோலி புற்றளை மகாவித்தியாலய அதிபர் திரு. எட்வேர்ட் ஜோஷுவா யாழ். பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியில் முதலில் ஆசிரியராக நியமனம் பெற்ற திரு. ஜோஷுவா இக்கல்லூரியில் தமிழ்ப்பிரிவுக்குத் தலைவராக இருந்து பின்னர்தென்புலோலி புற்றளை மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுர்.

இவர் யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்க வடமராட்சிக்கிளையின் தலைவராகவும் சேவையாற்றி வருகின்றுர். திரு. ஜோஷுவா பி. எச். டி. மேற்படிப்புக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளார். (52)

## புதிய நிர்வாகிகள்

(தெல்லிப்பழை)

உதயநகர் ஐக்கிய நாணய சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ச. தர்மராசா. செயலாளர்: பொ. சின்னையா, பொருளாளர்: சண். புண்ணியமூர்த்தி. (76)

## தபாலகத்தில் குழாய்க்கிணறு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி பரந்தன் ரேட்டறிக்கழகம், பரந்தன் தபால் கந்தோரில் குழாய்க்கிணறு அமைத்துக்கொடுத்துள்ளது “மேற்படிக் சழகத்தலைவா திரு. வ. சிவநாதனின் முயற்சியால் இக்கிணறு அமைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நிவாரணமாக உணவுப் பொருள்

(மருதங்கேணி)

வடமராட்சியில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களில் பாதிக்கப்பட்ட மக்களில் இதுவரை ஆறுயிரம் குடும்பங்களுக்கு 4 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப்பொருள்கள் உதவியாக வழங்கப்பட்டுள்ளன.

தட்டுவன்கொட்டி, ஆத்திலும், உடுப்பிட்டி, பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இப்பொருள்களை வழங்கியுள்ளன.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் இடம்பெற்ற சம்பவங்களையடுத்து வடமராட்சி கிழக்கிற்கு இடம்பெயர்ந்த மக்களுக்கு சர்வோதய இயக்கம் நிவாரண உதவிகள் வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (53)

## மினிபஸ் ஒப்படைக்கப்பட்டது

(பருத்தித்துறை)

இந்திய அமைதிகாக்கும் படையினரால் தடுத்து வைக்கப்பட்ட கொழும்பு-பருத்தித்துறை சேவையிலுள்ள மினிபஸ் ஒன்று உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

வியாபாரிமூலையில் கடந்த மாதம் இடம்பெற்ற அசம்பாவிதசம்பவத்தையடுத்து கொழும்பு – பருத்தித்துறை சேவையில் ஈடுபடும் இம்மினிபஸ் தடுத்துவைக்கப்பட்டது.

இந்த மினிபஸ் வண்டியை உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறு பருத்தித்துறை பிரஜைகள் குழு இந்திய அமைதிகாக்கும் படையினரிடம் கோரிக்கை விடுத்திருந்தது. (52)

### ஜனதிபதியிடம் கோரிக்கை

# ‘மின்சாரம் தர முடியாவிடின் நிவாரணம் வழங்கவும்’

[யாழ்ப்பாணம்]

வடபகுதிக்கு மீண்டும் மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின சமாசம் ஜனதிபதி திரு ஆர். பிரேமதாசாவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சமாசத்தின் சார்பில் அதன் செயலாளர் திரு. இ. தவகோபால் ஜனதிபதிக்குவிடுத்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

“கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக வடமாகாணத்திற்கு மின்சாரம் திட்டமிட்ட சிலரால் தடைசெய்யப்பட்டு வருகின்றது. இதனை நிவர்த்தி செய்ய எடுத்த முயற்சிகள் யாவும் அதேகும்பலால் தடைசெய்யப்பட்டு வருகின்றது என பத்திரிகை மூலம் அறியப்படுகின்றது. நாம் யாவரும் இலங்கையர் என்பதை மறுக்க முடியாது. இலங்கையின் ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும் பேணிக்காக்க வேண்டியது மறுக்க முடியாத கடமையாகும்.

“இப்படி இருக்கையில் வடமாகாண மக்களை ஏன் துன்புறுத்த வேண்டும். இதனுல் இங்கு தொழில் புரியும் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் குடும்பங்களைப்பராமரிக்க முடியாமல் தவிக்கின்றுர்கள். இதனிலும் மேலாக நம் பொருளாதாரம் பின்னேக்கிப் போகின்றது.

“இவையாவையும்சீர்தூக்கி பார்த்து, வடமாகாண மின் இணைப்பை சீரமைக்க நடவடிக்கையெடுத்து மக்களின நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் பெற்று நாட்டின் பொருளாதார சுபிட்சத்திற்கும் வழிகோலும்படி கோருகின்றேம்.

“இதில்உங்களுக்கு ஏதாவது நடைமுறைக கஷ்டங்கள் இருக்குமாயின் இங்கு வேலையற்றுத் தவிக்கும் குடும்பங்களுக்கு நிவாரணம் கொடுக்க நடவடிக்கை எடுக்கவும்.”

## 2 வருட சம்பள முற்பணம்

(சுன்னுகம்)

இரு வருட சம்பள முற்பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளவர்களில் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் நடவடிக்கைகள மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மருதனுமடம் கோட்டக்கல்விப் பிரிவில் இருவருட சம்பளம் கோரி அனுப்பப்பட்ட 700க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுகின்றன. தகுதியுள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அதற்கென நியமிக்கப்பட்ட பரிசீலனைக் குழு. நாளை மறுதினம் மருதனுமடம் கோட்டக்கல்வி அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. ஆர். கே. குலசேகரன் தலைமையில் கூடவிருக்கின்றது.

மருதனுமடம் கோட்டக் கல்விப் பிரிவுப் பகுதியிலிருந்து 30 விண்ணப்பதாரிகளை யாழ். கல்வித் திணைக்களத்திற்குக் கடன் வழங்குவதற்காகச் சிபார்சு செய்யப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (77)

# தங்கத்தை இறக்குமதிசெய்ய இந்தியா ஆலோசனை

(புதுடில்லி)

தங்கத்தைத் தம் நாட்டிற்கு இறக்குமதி செய்வது குறித்து இந்தியா ஆராய்ந்து வருகின்றது.

நாட்டிற்குள் தங்கம் கடத்துவதைக் கட்டுப்படுத்தவே இவ்வாறு தங்கத்தை இந்தியாவுக்கு இறக்குமதிசெய்ய இந்திய அரசு ஆலோசித்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இறக்குமதி செய்யும் தங்கத்தின் விலை குறைவாகவே இருக்கும் எனவும் இதனை நகைகளாக்கி சர்வதேச மட்டத்திற்குப் போட்டியிடமுடிம் என இந்தியப் பாராளுமன்ற வெளிவிவகார இணை அமைச்சர் திரு. எம். எம். ஜேக்கப் தெரிவித்துள்ளார்.

## ஆலயம் புனரமைப்பு

(தெல்லிப்பழை)

இலங்கை இராணுவத்தினரின் தாக்குதலின் போது முற்றுக அழிக்கப்பட்ட குரும்பசிட்டி அம்மன் ஆலயம் புனரமைக்கப்பட்டு வருறலது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னா குரும்பசிட்டியை நோக்கி படையெடுத்த இலங்கை இராணுவத்தினர் பாடசாலைகள், வீடுகள், கடைகள், கோவில்கள் என்பவற்றைத் தாக்கி நாசமாக்கினர். இவ்விதம் தாக்குதலுக்குள்ளாகி முற்றுக சேதமாக்கப்பட்ட ஆலயங்களில் ஒன்றுன குருப்பசிட்டி அம்மன ஆலயம் அவ்வூர் மககளின் உதவியுடன் இப்பொழுது புனரமைக்கப்பட்டு வருகிறது (76)

# பாடசாலைகளின் நலன்கருதி பொதுச்சங்கம் அமைப்பு

(உடுவில்)

உடுவில் கொத்தணி பாடசாலைகளின் நலன்களைப் பேணுவதற்கென உடுவில் கொத்தணியைச் சேர்ந்த 13 பாடசாலைகளினதும், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டது.

இப்பாடசாலைகளைச் சேர்ந்த 13 பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களைக் கொண்ட கூட்டத்தில் பொதுச் சங்கம் அமைக்கப்பட்டது.

மருதனுமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு இணுவில் அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபரும் உடுவில் கொத்தணி அதிபருமான திரு. எஸ். சோதிப்பெருமாள் தலைமை வகித்தார். உடுவில் கொத்தணிப் பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் தெரிவின்போது, திரு எஸ். சோதிப்பெருமாள் தலைவராகவும், செயலாளராகப் பண்டிதர் திரு. நா. இராசையாவும், பொருளாளராக திரு. அனு. வை. நாகராசனும், தெரிவு செய்யப்பட்டனர். ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதியாக 13 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (109)

# காரைநகரில் குண்டுவெடிப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வலந்தலைச் சந்திக்கு அண்மையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

அச்சம்பவத்தை அடுத்து யாழ். நகரிலிருந்து காரைநகர் நோக்கிச் சென்ற பஸ்கள் காரைநகருக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை என்றும், பயணிகள் இறக்கப்பட்டு பஸ்கள் திருப்பி அனுப்பப்பட்டன என்றும் இந்த பஸ்கள் இரவு வழக்கம்பரையில் தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

நேற்றுக்காலையிலேயே இந்த பஸ்கள் காரைநகர் டிப்போவுக்குச் சென்று வழமையான சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. சிறிதுநேரம் பஸ்சேவைகள் பாதிக்கப்பட்டன என்றும தெரிவிக்கப்பட்டது.

# சட்டத்தரணிகளுக்கு எதிராக வன்முறை, பயமுறுத்தல்

## சம்மேளனம் கண்டனம்

(கொழும்பு)

சட்டத்தரணிகளாகத் தொழில் புரிபவர்களுக்கு எதிராக அண்மைக்காலமாக அதிகரித்துவரும் வன்முறை, பயமுறுத்தல் சம்பவங்கள் தொடர்பாக இலங்கைச் சட்டத்தரணிகள் சம்மேளனம் கவலைகொண்டுள்ளது என்று அண்மையில் நடைபெற்ற இலங்கைச் சட்டத்தரணிகள் சம்மேளனக் கூட்டத்தின் முடிவில் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

''சட்டத்தரணி விஜேதாசவியன ஆராய்ச்சி தொடர்பான வழக்கில் சந்தேக நபராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர் தர்மதாசாவின் சார்பில் ஆஜராக எந்தச் சட்டத்தரணியும் வருவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. தர்மதாசாவின் சார்பில் ஆரம்பத்தில் ஆஜராகிய சட்டத்தரணியின் வீட்டில் அவரது குடும்ப நபபர் ஒருவர் கொலைசெய்யப்பட்டார். இதனால் அவர் வழக்கிலிருந்து ஒதுங்கிக்கொண்டுள்ளார்.

''பல ஆட்கொணர்வு மனுக்கள் சார்பில் ஆஜராகியுள்ள சட்டத்தரணி காஞ்சன அபேபாலவுக்கு கொலைப் பயமுறுத்தல் விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. சட்டத்தரணி காஞ்சன அபேபாலவுக்கு வந்த டெலிபோன் செய்தியில் சட்டத்தரணி பிரின்ஸ் குணசேகராகவும் தமது பட்டியலில் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

''பொலிஸ் உத்தியோகத்தர் தர்மதாசாவுக்கு எதிரான வழக்கில் சட்டத்தரணி ஒருவர் ஆஜராகாத பட்சத்தில் அது நீதியானதாக அமையமாட்டாது. இது பாரதூரமான நிலைமையாகும்.

''சட்டத்தரணி காஞ்சன அபேபால, பிரின்ஸ் குணசேகர ஆகியோர் ஆட்கொணர்வு மனுக்களுக்கு ஆஜராகக்கூடாது எனத் தடை விதிக்கப்படின், சட்டவிரோதமாகக் கைதுசெய்யப்பட்டு சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்காக சட்டநடவடிக்கைகளில் ஈடுபடுவது முடியாத காரியமாக அமையும். இவ்வாறான சூழ்நிலையில் சட்டத்தரணிகளைப் பாதுகாப்பது அரசின் கடமையாகும்.''

(து)

## பரு. பிரஜைகள் குழு அறிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை புலோலிப் பகுதியில் கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறை அமைதிப் படை முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யமுடியாமைக்கு பருத்தித்துறை பிரஜைகள் குழுவினர் காங்கேசன்துறைக்கு வராததே காரணமென வெளிவந்த செய்தி குறித்து பருத்தித்துறை பிரஜைகள் குழுவினர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். அறிக்கையின் விபரம் வருமாறு:-

''இந்திய சுதந்திர தினமான இம்மாதம் 15-ம் திகதி பருத்திததுறையில் கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறை முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று இந்திய அமைதிகாக்கும் படையினர் யாக்கரு முகாமில் வைத்து எமக்கு உறுதியளித்தனர். இந்த விஷயத்தை நாம் கைதுசெய்யப்பட்டுள்ளவர்களின் பெற்றோர்களுக்குத் தெரிவித்தோம். 15-ம் திகதி இவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்த்தோம். கைதுசெய்யப்பட்டவர்கள் வழமையாக புலோலி முகாமில் வைத்தே விடுதலை செய்யப்படுவது வழக்கம். விடுதலை சம்பந்தமாக நாங்கள் புலோலி முகாமுடனும், யாக்கரை முகாமுடனும்தான் தொடர்பு கொள்வது வழக்கம்.''

''15-ம் திகதி விடுதலை செய்யப்படாமையால் 16-ம் திகதி புலோலி முகாமுடன் தொடர்பு கொண்டோம். அப்போது புலோலி முகாமில் அவ்விளைஞர்களின் விடுதலை பின்போடப்பட்டுள்ளதாகவும், ஆனால் கைதுசெய்யப்பட்டுள்ள ஒவ்வொரு பெற்றோரினதும் கையொப்பம் அடங்கியபட்டியல் ஒன்றை யாக்கரு முகாமில் கையளிக்கும்படியும் எமக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர்களின் கூற்றுப்படி கையொப்பமடங்கிய பட்டியல் யாக்கரு முகாமில் கையளிக்கப்பட்டது. காங்கேசன்துறை முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் வழமையாக பலாலியில் வைத்து விடுதலைசெய்யப்படுவது போலவே விடுதலைசெய்யப்படுவார்கள் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றோம்.

காங்கேசன்துறை இந்திய அமைதிகாக்கும் படைமுகாமிற்கு பிரஜைகள் குழுவினர் செல்லாதபடியினாலேயே கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுதலைசெய்யப்படவில்லை என்பது தவறானதாகும். (52)

## தமிழ் மொழி அமுலாக்க

(4ம் பக்கத் தொடர்ச்சி)

களின் பின்னர் வெளியிடப்பட்டுள்ள 07-07-89-ந் திகதிய வர்த்தமானிப் பிரதியிலும் பழைய சிங்களத்தேர்ச்சி நிபந்தனைகளே வலியுறுத்தப்பட்டுள்ளன. அத்துடன் வருடாந்த சம்பள உயர்வுபெறும் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு 1989 ஜனவரியில் திணைக்களத் தலைவர்கள் தம் சிபார்சினை செய்தனர். அதில் சிங்களத் தேர்ச்சி இல்லாதவர்களின் சம்பள உயர்வு மறுக்கப்பட்டது. சிங்களத்தேர்ச்சிப் பரீட்சைக்கு (அரசாங்க ஊழியர்) கடந்த மாதம் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. எனவே எங்கே ஐயா இருக்கிறது தமிழ் அரசகருமமொழியாக? எல்லாம் ஒரு கண்துடைப்புத் தான்? போலிநாடகம்தான். இவ்வாறான நிலைமைக்குக் காரணம் என்ன? தமிழ்மொழியை நிர்வாக அரசு மொழியாக நடைமுறைப்படுத்துவதனை கண்காணிப்பதற்கு எவரும் இல்லாததே.

உண்மையில் 1956-ம் ஆண்டு சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட்ட காலந்தொடக்கம் தமிழ் அரசகருமமொழியாக்கப்பட்ட 1988-ம் ஆண்டு ஒக்டோபர் 18 வரையான 32 ஆண்டு காலப்பகுதியிலும் சிங்களமொழிச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் தமிழ் மக்களைப் பாதிக்கக்கூடியதுமான மொழிஅடிப்படையிலான சகல சட்டங்களும் இரத்துச்செய்யப்படல் வேண்டும். (16-வது அரசியல் அமைப்புச்சட்டத்தில் இப்படி இரத்துச் செய்யும் சரத்து எதுவும் இல்லை) அத்துடன் 1956-ம் ஆண்டின்பின் அரசாங்க சேவையில் சேர்ந்த தமிழ் அரசாங்க ஊழியர்கள் [திறைசேரி சுற்றறிக்கை 701 இன் படி 4-09-1966 ந் திகதி) பழைய ஊழியர் எனவும் புதிய ஊழியர்கள் எனவும் இரண்டாகப் பிரிக்கப்பட்டனர். பழைய ஊழியர்களுக்கு 1956ம் ஆண்டின் சிங்களச் சட்டப்படி, சிங்களத்தில் தேர்ச்சி பெறாவிட்டால் தம் பதவிகளிலிருந்து இளைப்பாறுவதற்கு சலுகை அளிக்கப்பட்டது. ஆனால் ''புதிதாகச் சேர்ந்த தமிழ் அரசாங்க ஊழியர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் (3 வருடத்துக்குள்) சிங்கள மொழியில் 8ம் வகுப்பில் (Grade III) தேர்ச்சியடையவேண்டும் என வற்புறுத்தப்பட்டார்கள். அவ்வாறு குறிப்பிட்ட 3 வருட காலத்தில் சிங்கள மொழியில் தேர்ச்சியடையாதவர்களின் சம்பள உயர்வு முதலில் இடைநிறுத்தப்பட்டது. பின்னர் முற்றாக நிறுத்தப்பட்டது. மறுக்கப்பட்டது. அவர்களுக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களில் இந்த நிபந்தனைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. எனவே, அவர்களுக்கு இந் நிபந்தனைகள் நீக்கப்பட்டு புதிய நியமனக் கடிதங்கள் வழங்கப்படல் வேண்டும். ஆனால் இதற்கு மாறாக 1988ன் பின் சேர்ந்த தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கும்கூட பழைய சிங்கள நிபந்தனைகளை வலியுறுத்தியே நியமனக்கடிதங்கள் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருவதுதான் உண்மையான நிலை இதனை தமிழ் அரசு ஊழியர்கள் யாரிடம் எடுத்துச் சொல்வது என்று புரியாமல் விழிக்கிறார்கள்.

அத்துடன், வடக்கு-கிழக்கு மாகாண அரசு அலுவலகங்கள் எல்லாவற்றிலும் நிர்வாக அலுவல்களைத் தமிழில் நடத்த அலுவலர்களுக்கு வற்புறுத்தவேண்டும்.

தேவையான அலுவலகங்களுக்கு தமிழ் தட்டெழுத்துப் பொறிகள் வழங்கப்பட்டுத் தமிழ் தட்டெழுத்தாளர்கள் நியமிக்க நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டு உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மாவட்டக் கச்சேரிகளில் தமிழ் சுருக்கெழுத்தாளர்கள் இல்லை. அவர்களை நியமிக்க நிதி ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் அரசமொழியாக செயற்படுத்த தமிழ்மொழி அமுலாக்கல் ஆணையாளர் நியமிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1956 முதல் 1989 வரை சிங்கள மொழிச் சட்டத்தால் பாதிக்கப்பட்டு உரிய வயதை அடைய முன்னரே தம் பதவிகளிலிருந்து கட்டாயமாக இளைப்பாறச்செய்யப்பட்டவர்களுக்கும், தம் பதவிகளில்உறுதிப்படுத்தப்படாதவர்களுக்கும், ஆண்டுச் சம்பள உயர்வு மறுக்கப்பட்டவர்களுக்கும் உரிய நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்.

தமிழ்மொழி முழுமையான அரசமொழியாக அமுல்நடாத்துவது குறித்தும் சிங்களத் தேர்ச்சிபெறாத தமிழ் அரசாங்க ஊழியர்களின் அவல நிலைபற்றியும் காலம்தாழ்த்தாமல் நடவடிககை எடுக்கப்படவேண்டும்.

- வி. ச. ஆனந்தன்
காரைநகர்.

## வடமராட்சியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி வழங்க கோரிக்கை!

(வடமராட்சி)

வடமராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து பல்வேறு பகுதிகளிலும் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு உதவி வழங்குமாறு வடமராட்சிப் பிரமுகர் குழு ஒன்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

புத்தூர், ஆவரங்கால், கல்வியங்காடு, முத்திரைச் சந்தை, அரியாலை, நல்லூர், யாழ்ப்பாணம், தீவுப்பகுதி ஆகியஇடங்களில் வடமராட்சி மக்கள் அகதிகளாகத் தங்கியுள்ளார்கள் எனத்தெரியவருகின்றது. (51)

## இராசி பலன்

29-08-1989

நவமி காலை 9 53 வரை, மிருகசிரிடம் அதிகாலை 4-24 வரை, மரணயோகம், அதன் பின் சித்தயோகம், இராகுகாலம் காலை 10-53 முதல் 12-06 வரை சுபகருமங்கள் செய்யலாம்.

மேடம்: வருவாய் அதிகரிப்பு, தொழில் பாராட்டு. குடும்பசுகம், உறவினர் வருகை, காரியசித்தி.

இடபம்: வீண்கற்பனை, அதிகாரிகள் சினம், பொருள் வரவு, மனச்சுமை, தாய்வழி விரோதம், குடும்ப விரிசல்.

மிதுனம்: மனமகிழ்ச்சி, தொழில் லாபம், அதிக சிந்தனை, பிதாவழித் தகராறு, காரியசித்தி, வாக்கு வன்மை

கடகம்; சலனம், எதிரிகள் துன்பம், குடும்பப் பகை, தொழில் நஷ்டம், கடிதத் தொல்லை, நோய் தணியும்.

சிங்கம்; பணமூலமான கவலை, தொழில் பாராட்டு. புதிய முயற்சி, குடும்ப ஒற்றுமை, புத்திரர்கவலை, காரியத்தடை.

கன்னி: தொழில் பிணக்கு, பயணங்களால் செலவு, சுப நிகழ்ச்சி, மக்களால் துன்பம், வாக்கு வன்மை

துலாம்; நம்பிக்கைத் துரோகம், கடன்படல், தொழில் நஷ்டம், அதிகாரிகள் துன்பம், வருவாய் வீழ்ச்சி.

விருச்சிகம்: தேகாரேக்கியம் குன்றும். மனச்சுமை, தொழில் பாதிப்பு, அலைச்சல்.

தனுசு: விவாகப்பேச்சு, தொழில் பாராட்டு, பதவி மாற்றம், ஒற்றுமை, வாக்கு வன்மை.

மகரம்: எதிர்பாராத உதவி, பெண்வழி நேசம், காரியசித்தி, குடும்பச் சிறப்பு. வேலையாட்கள் பகை.

கும்பம்: அந்நிய வாசம். அதிக யோசனை, வைத்தியச் செலவு, பண்பற்ற செயல், பணக்கஷ்டம்.

மீனம்: முரண்பாடு, கருத்துமோதல். குடும்பக் கவலை. வேலைப்பளு, தகராறு, பணச் செலவு.

## ''கால்நடை வைத்தியரின் ஆலோசனையை புறக்கணிக்ககூடாது''

[காங்கேசன்துறை]

''வலி. வடக்கிலிருந்து வெளியிடங்களுக்கு மாடுகளை அனுப்பியவர்கள் அவற்றை இங்கு கொண்டுவருவதற்கு கால்நடை வைத்திய அதிகாரிகளின் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளவேண்டும். கால்நடை வைத்திய அதிகாரிகளின் ஆலோசனைகளைப் புறக்கணிக்கக்கூடாது''

இவ்வாறு வலி. வடக்கு கால் நடை வைத்திய அதிகாரி திருமதி தனபாலசிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாடுகளைத் தாக்கும் நோய் அபாயம் குறித்து அவர் வெளியிட்டுள்ள இவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வலி.வடக்கில் பலாலி, மயிலிட்டி, வசாவிளான், கீரிமலை, பன்னாலைப்பகுதிகளில் இருந்து மேய்ச்சலுக்காகவும், எருவுக்காகவும், தோட்டம் செய்யும் நோக்கத்துக்காகவும் மாடுகளை வரணி, கரைச்சி, கண்டாவளை மற்றும் கிளிநொச்சி ஆகிய பல பகுதிகளுக்கு அனுப்பியவர்கள் அவற்றை திரும்பக் கொண்டுவருவதில் அவதானமாக இருக்கவேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும், வரணிப் பகுதிகளிலும் கொடூரமான கோமாரி நோய் காணப்படுகிறது. வலி. வடக்கிலிருந்து சென்ற பல மாடுகள் அங்கேயே நோய் பீடித்து இறந்துவிட்டதாகவும் அறிகிறோம். ஆகவே அப்பகுதியிலிருந்து மாடுகளைத் திரும்பக்கொண்டுவர எண்ணுபவர்கள் தெல்லிப்பழை கால்நடை வைத்திய அதிகாரியைச் சந்தித்து அம்மாடுகளைக் கொண்டுவர முன்னர் தடுப்பூசி ஏற்றவும். கொண்டுவருவதற்கான சான்றிதழை பெற்றுக்கொள்ளவும் முன்வரவேண்டும். அதுமட்டுமன்றி வலி. வடக்கில் இதுவரை மாடுகளுக்குத் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்கள் உடனடியாக அதை ஏற்றிக் கொள்ள வேண்டும்.

''மாடுகளைத் தாக்கும் கால்வாய் நோய், தொண்டை அடைப்பான், கோமாரி போன்ற நோய்களுக்கான தடுப்பூசிகள் போதுமான அளவில் கையிருப்பில் உண்டு. ஆகவே மாடுகளின் சொந்தக்காரர்கள் இந்த ஊசிகளை ஏற்றி மாடுகளின் உயிரைக் காப்பாற்ற முன்வரவேண்டும்'' (86)

## நியமனம்

(சுன்னாகம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபராக திரு. எஸ். இராசவல்லவன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகாலவரை அதிபராக இருந்துவந்த திரு. பொன். நாகரத்தினம் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். (77)

## தொழிலாளர் பாதிப்பு

(சுன்னாகம்)

கட்டிடப்பணியில் ஈடுபட்டுள்ள பலர் தங்கள் வேலையை இழந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. அண்மையில் சிமெந்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டுநிலையே அவர்கள் வேலை இழந்ததற்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

மின்சாரமில்லாத காரணத்தால் சிமெந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து கட்டிடங்கள் பல இடை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (77)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

'பிரித்தானியாவில் இனவாதம்' எனும் தலைப்பில் ஒரு கருத்தரங்கு, இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் யாழ். பல்கலை கழக பொருளியல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

## அற்புதம் நிறைந்த ஸ்ரீ நாராயணர்

ஸ்ரீ நாக வரத நாராயணப் பெருமானை மூல மூர்த்தியாகக்கொண்டு அருள்பாலித்து வருகிறது. அளவெட்டி நாகேஸ்வரம் ஆலயம்.

கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்ற உற்சவத்துடன் வருடாந்த உற்சவம் ஆரம்பமானது. இன்று தீர்த்தோற்சவம் நடைபெறுகிறது.

### ஆலய வரலாறு

ஸ்ரீ நாராயணர் தேவஸ்தானம் பலவித அற்புதங்களை நிகழ்த்தி கீர்த்திமிக்க தலமாக விளங்கி வருகிறது.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வாலயம் அமைந்த பகுதி நுணா, வாகை விளாத்தி போன்ற மரங்களும் பற்றைகளும் புதர்களும் நிறைந்த சிறு காடாக இருந்தது.

இந்தப்பகுதி அடங்கிய சூழலில் வாழ்ந்த மக்களுக்கு கனவாக ஸ்ரீ நாராயணர் பாம்பு வடிவத்தில் புற்றிலிருந்து தோன்றி 'கோபாலன் நானே' என்றருளினராம். அன்றிலிருந்து மக்கள் ஆவணி மாதத்தில் வரும் ரோகிணி நட்சத்திரத்தில் நாகதம்பிரான் எனப்போற்றி வணங்கி பொங்கல் மடை செய்து வந்தனர்.

அதிசயமிகுந்த ஒரு முக்கோணக்கல் அக்காட்டுக்குள் தோன்றியது. அந்தக்கல்லையும் வைரவப் பெருமானையும் மக்கள் பூஜித்து வணங்கினர்.

இப்பொழுது ஆலயப்பக்கத்தில் இருக்கும கிணறு முன்னர் கேணியாக இருந்ததென்றும் இதனால் கேணியடி நாகதம்பிரான் என அழைத்து வந்ததாகவும் மூதாதையார் வாயிலாக அறிகிறோம்.

தேவஸ்தானத்தின் பொறுப்பாளராக இருந்து பரிபாலித் வரும் அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள் 1953ம் ஆண்டு தொடக்கம் எடுத்த அயராத முயற்சிகளின் பயனாக 1969ல் ஆலயமானது. குருவாரத்திலும் சுக்கிரவாரத்திலும் விசேட பூஜைகள் நிகழத் தொடங்கின. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மக்கள்வந்து வழிபடத்தொடங்கினர். தற்போதைய மூலஸ்தானக்கோயில் 1979ல் கும்பாபிஷேகத்துடன் மலர்ந்தது 1986ல் தங்கரதத்திலஸ்ரீ நாராயணர் வரும் அற்புதக் காட்சியையும் கண்டு களிப்புற்றனர்.

இவ்வாலயத்தின் மீது அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களப்ல 'திருவருட்கவியமுதம்' நாராயணர் பிரபந்தத்திரட்டு, அருட்கவிக்களஞ்சியம், கீர்த்தனைகள, நாராயணர் அனுபூபதி போன்ற நூல்கள் எழுதி வெளியிடப்பட்டன.

இவ்வாலயம் சீரும் சிறப்பும் பெற்றோங்குவதற்கும் தொடர்த்தும் ஆலயத் திருப்பணிகளை நிறைவேற்றுவதற்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாக வரத நாராயண சுவாமி. அடியார்களுக்கு வேண்டும் வரங்களை அருள வேண்டுமென பிரார்த்திப்போமாக.

- க. சிறிகரன்

நியூசாந்தி யாழ்நகர்
10-30, 2-30 மட்டும்
சிவகுமார், சகுந்தலா, தங்கவேலு, தேங்காய் சீனிவாசன் நடித்த
கோடீஸ்வரன் மகள்
[ஈஸ்ட்மன் கலர்]

## வடக்கு-கிழக்கு ஆசிரியர் பயிலுநர் தெரிவு: ஜனாதிபதிக்கு அறிக்கை

(கொழும்பு)

25,000 ஆசிரியர் பயிலுநர்கள் தெரிவு தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை குறித்து கல்வி அமைச்சு இம்மாத இறுதியில் ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிக்கும்.

அதேநேரத்தில் மேற்படி நேர்முகப்பரீட்சையை நடாத்த முடியாதசூழ்நிலை குறித்து 3 பிரதிகளில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சு சகல பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும்கேட்டுள்ளது, (121)

## மாகாணசபை உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு ரூபா 5000; மின்கட்டணம் ரூபா 375

(கொழும்பு)

மாகாண சபை உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு அரசாங்கம் மாதாந்தம் மேலதிக 5 ஆயிரம் ரூபாவை வழங்குவதென்று தீர்மானித்துள்ளது.

அத்துடன் மாகாண சபை உறுப்பினர்களுக்கு மின்சாரக் கட்டணமாக 375 ரூபா வழங்குவதென்றும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானத்துக்கமைய இதற்குரிய பணம் மாகாண சபை நிதியிலிருந்து வழங்கப்படவுள்ளது.

### பரந்தனில் குடிநீர்க் கஷ்டம்

(யாழ்ப்பாணம்)

பரந்தன் பகுதியில் கடும் வரட்சி நிலவுகிறது. கிணறுகளிலும் குளங்களிலும் நீர் வற்றியுள்ளதால் இப்பகுதி வாழ் மக்கள் குடிநீருக்குப் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். பொதுஸ்தாபனங்கள் குடிநீர் வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. (ஐ)

## இப்படியும் நடக்கிறது

தென்பகுதியில், இந்தியப் பொருள்களுக்குத் தீவிரவாதக்குழுவினால் தடை விதிக்கப்பட்டிருப்பது தெரிந்த விஷயமே.

ஆனாலும், தடையையும் மீறி இந்தியப் பொருள்கள் எப்படி விற்பனை செய்யப்படுகின்றன என்பதை சில தினங்களுக்கு முன்னர் இங்கு குறிப்பிட்டிருந்தேன்.

இப்பொழுது ஒரு புதுச்செய்தி கிடைத்திருக்கிறது.

கொழும்பிலுள்ள பிரபல்யமான ஒரு புடவைக் கடைக்கு ஒரு பெண்மணி காரில் வந்து இறங்கினர். தவக்கு ஒரு கூறைப்புடவை தரவேண்டும் என்று சிப்பந்திகளை வேண்டினர்.

இந்தியப் பொருள்கள் விற்பது மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டிருப்பதாகக் கடைச் சிப்பந்திகள் கூறினர். பெண்மணியோ விடவில்லை. கெஞ்சினர், கூத்தாடினர். கடைசியில் பாவத்துக்கு இரங்கி சிப்பந்திகள் அவருக்கு ஒரு இந்தியக் கூறைப்புடவையை விற்றனர். பெண்மணி முகம்மலர காரில் சென்றுவிட்டார். செல்லும்போது திருமண அழைப்பிதழ் ஒன்றும் கொடுத்தார். கடைச்சிப்பந்திகள் ஆவலுடன் திருமண அழைப்பிதழைப்பெற்றுக்கொண்டு. அதனைப்படிக்கத் தொடங்கினர்.

"இந்தியப் பொருள்களை விற்பதால் தண்டனையாக இருபது நாட்கள் கடையைப் பூட்ட வேண்டும்!" என்று அழைப்பிதழில் எச்சரிக்கப்பட்டுருந்தது. இப்போது சம்பந்தப்பட்ட கடை பூட்டப்பட்டிருக்கிறது!

'திருமண அழைப்பிதழைப் பெற்றுக்கொண்ட அத்தனை முகங்களிலும் நெருப்பின் ஜுவாலை தெரிந்தது.

ஊடுருவி"

## பாதுகாப்பு முகாம்களில் ஆயுதப்படை வீரர்களின் 1460 குடும்பங்கள் தஞ்சம்!

(கொழும்பு)

ஜே. வி. பியின் பயமுறுத்தல் காரணமாக இதுவரை 1460 ஆயுதப் படையினரின் குடும்பங்களுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது,

தென்பகுதியில் உள்ள இராணுவ முகாம்களிலும் இராணுவப் பாதுகாப்புடன் கூடிய பாடசாலைகள், கட்டிடங்களிலும் இக்குடும்பங்கள் தஞ்சமடைந்துள்ளன. மேலும் பொலிஸ் மற்றும் ஆயுதப் படையினரின் குடும்பங்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக இராணுவம் வசதியான பாடசாலைகளையும், கட்டிடங்களையும் பொறுப்பேற்று வருகின்றது.

### யாழ். மாநகரசபைக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெற்ற நாவாந்துறை சென். மேரீஸ் ஆலய வருடாந்த திருவிழா சிறப்பாக நடைபெற சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய யாழ். மாநகராட்சி மன்றத்திற்கு ஆலய பங்குச் சபை நாவாந்துறை மக்கள் சார்பில் பாராட்டு தெரிவித்துள்ளது.

## சுயாதீன மாணவர் சங்கத் தலைவர் சுட்டுக் கொலை

### 'கைஸ்' கண்டனம்

(யாழ்ப்பாணம்)

'சுயாதீன மாணவர் சங்க'த் தலைவர் திரு. கே. எல். தர்மசிறி சுட்டுக் கொலை செய்யப்பட்டதை மாணவர் இளைஞர் பொதுமன்றம் ('கைஸ்') கண்டித்துள்ளது. இது சம்பந்தமாக 'கைஸ்' விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"சுயாதீன மாணவர் சங்கத்தின் தலைவரும், தென்னிலங்கை பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அங்கத்தவருமான கே. எல். தர்மசிறி சுட்டுக் கொல்லப்பட்டார். அவரின் இழப்பால் வாடும் சுயாதீன மாணவர்சங்க அங்கத்தவர்களினதும், குடும்பத்தினர்களினதும் துயரின் 'மாணவர் இளைஞர் பொது மன்ற'மும் பங்கேற்கின்றது.

"சிங்கள முற்போக்கு மாணவ சமுதாயத்தில் தனது செழுமையான பணிகளின் மூலம் 'சுயாதீன மாணவர் சங்க'த்தைவளர்த்துக்கொள்ள அயராது கே எல். தர்மசிறி உழைத்தவர். அத்துடன் சிங்கள அரசின் கொடூர ஆட்சியினை எதிர்த்தும் நீண்டநாட்களாகப் போராடியவர். கே.. எல். தர்மசிறியின் இழப்பு சிங்கள மாணவர்களுக்கு மட்டுமன்றி தமிழ் பேசும் மாணவர் சமுதாயத்துக்கும் ஓர் பேரிழப்பாகும்.

"இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் 87 ஆகஸ்டிலும், 88ஜுலையிலும் ஈழப் பகுதிகளுக்கு 'மாணவர் இளைஞர் பொதுமன்றத்'துடன் இணைந்து வந்திருந்தார். தமிழ் பேசும் மக்களின் அன்றாடப் பிரச்னைகளிலும் இராணுவப் பாதிப்புகளிலும் நேரடி முகங் கொடுத்திருந்தார். தமிழ்பேசும் மாணவர் சமுதாயத்துடன் சிங்கள முற்போக்கு மாணவர்களும் இணைந்து இனவாத அரசுக்கெதிராக பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கு பற்றியிருந்தார்.

'சுயாதீன மாணவர் சங்கத்தின் முன்னைய தலைவரான சுயாபத்திரனவை கொலை செய்த அதே சக்திகளினால் கே. எல். தர்மசிறி இன்று கொல்லப்பட்டுள்ளார். மரணித்த கே. எல். தர்மசிறிக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்".

### கிராம அபிவிருத்தி சங்கக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆட்சிக் குழுக கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சங்கத் தலைவர் திரு. செ. கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கிராம அபிவிருத்தி, சங்கச் செயல் திட்டங்கள் பற்றி ஆராயப்படும் என்று சங்கச் செயலாளர் திரு சி. சி. வரதராசா தெரிவித்துள்ளார்.

ஹரன் சினிமா
(யாழ்ப்பாணம்)
10-30, 2-30
சிவாஜி, சுரேஷ், ரேவதி, ஜெய்சங்கர், மனோரமா நடித்த
மருமகள்

### திறந்தவெளி பல்கலைக்கழகம்

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில் ஆங்கிலக் கற்கை நெறிக்கு இம்மாதம் 28-ம் திகதிவரை மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்று யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை திறந்த வெளிப் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தமது மாணவர் பதிவுப்புத்தகத்தை இம்மாதம் 28-ம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ

### சாரணர் ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சாரணர் கிளைச்சங்கத்தின் அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை நல்லூர் சாரணர் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது சாரணர்கள், சாரணத்தலைவர்கள், சாரண ஆணையாளர்கள் கலந்துகொண்டு ஆலோசனை வழங்குவார்கள்.

### பூநகரி பஞ்சாயத்துச்சபை கட்டிடத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்கங்களின் சமாஜத்தின் பூநகரி பஞ்சாயத்து சபையின் புதிய அலுவலகக் கட்டிடத் திறப்பு விழா, நாளை 26-ம் திகதி சனிக்கிழமை வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்கங்களின் சமாஜத் தலைவர் திரு. பொன் மதிமுகராசாவினால் திறந்து வைக்கப்படும்.

பூநகரி பஞ்சாயத்துச் சபைத் தலைவர் திரு. கா. பஞ்சாட்சரம் தலைமையில் விழா நடைபெறும்.

பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. பாலசுப்பிரமணியமும், பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. தி. இராசநாயகமும் மங்களவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்கள்.

வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்கங்களின் சமாஜப் பொதுச் செயலாளர் திரு. இ. செல்வராசா, சாவகச்சேரி பஞ்சாயத்துச் சபைத் தலைவர் திரு. பொன். செல்லையா, கேரதீவு பஞ்சாயத்து உறுப்பினர் திரு. இ. கனக சபை, பூநகரி பலநோ. கூ. சங்க பொதுமுகாமையாளர் திரு. க. பாலசுப்பிரமணியம, தெங்கு பனம்பொருள் உற்பத்திச் சங்கப் பொதுமுகாமையாளர் திரு. ஏ. வி. கே. மாணிக்கம். பூநகரி மினிபஸ் சங்கப் பொருளாளர் திரு. யோ. பெனடிக்ற் உட்படப் பலர் உரை நிகழ்த்துவார்கள். (ஐ)

# தெற்கில் தொடரும் மரணங்கள் ஆஸ்பத்திரியிலிருந்து சடலங்கள் கடத்தப்பட்டன!

(கொழும்பு)

மாத்தறை மாவட்டத்தில் 'பேயோட்டம்' நிகழ்ச்சிச் சம்பவத்தில் ஆயுதப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 9 பேரின் சடலங்கள், வைத்தியசாலையிலிருந்து ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டன.

பிட்டிகொல என்னுமிடத்தில் தாய், தந்தை, மகன் மூவரும் வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கண்டி பொலிஸ் பிரிவில் பரவலாக 17 சடலங்கள், துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளன.

அகலவத்தையில் சுட்டுக் கொல்லப்பட்ட பாடசாலை அதிபரின் தலை வெட்டி எடுத்துச் செல்லப்பட்டது.

அனுராதபுரம் மாவட்டத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் 9 சடலங்கள் காணப்பட்டன.

மடவெல வீதியில் இரு முஸ்லிம் வாலிபர்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டனர்.

ஜாஎல போபிட்டி மதகு ஒன்றின் கீழ் 16 சடலங்கள் காணப்பட்டன. இதில் 4 சடலங்கள் எரிந்து காணப்பட்டன. மாவனல்ல - 4, நாதெனிய - 2 என்ற எண்ணிக்கையில் மேலும் சடலங்கள் காணப்பட்டன. நிட்டம்புவவில் பொலிஸ் கான்ஸ்டபிளின் தாய் சுட்டுக்கொல்லப்பட்டார். அங்குனபெலன, எகலியகொட ஆகிய இடங்களில் தலா 2பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மகரகமவில முன்னாள் அதிரடிப்படை வீரரும், தலங்கமவில் விமானப்படை வீரரொருவரின் சகோதரனும் சுட்டுக்கொல்லப்பட்டனர். (121)

## பரமானந்த ஆச்சிரமத்தில் தஞ்சமடையும் அகதிகள்

(வடமராட்சி)

வடமராட்சியில் தற்போது பல பாகங்களிலும் தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றுவருகின்றன.

வதிரி, திக்கம், நெல்லியடி, புதுத்தோட்டம், தேவரையாளி, மாலிசந்தி போன்ற இடங்களிலுள்ள பெருந்தொகையான மக்கள் ஸ்ரீபரமானந்த ஆச்சிரமத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்த ஆச்சிரமத்தில் அதிக அளவில் மக்கள் தஞ்சமடைந்திருப்பதால், ஆச்சிரமம் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது.

கடந்த இருபது வருடங்களாக அநாதைச் சிறுவர்கள், வயோதிபர் இல்லம் போன்றவை சுவாமி ஸ்ரீபரமானந்தா அவர்களின் தனி முயற்சியிலேயே பராமரிக்கப்பட்டு வந்தது

அகதிகள் அதிகரிப்பால் இவ்வாச்சிரமம் பெரிதும் பாதிப்பிற்குள்ளான நிலையில் உள்ளது. (51)

# கிழக்கில் சடலங்கள்

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்று வம்மியடிகுளம் என்னுமிடத்தில் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். மங்களா என்ற இளம்பெண் ஒருவர் சைனட் அருந்தி உயிரை மாய்த்துக்கொண்டார்.

பாலமுனையில் தேடுதலில் தேங்காய் பறிக்கும் தொழிலாளி ராஸுல்தீன் மொகமத் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நிந்தவூரில் கடத்தப்பட்ட ஏ. நஸார் (வயது 21) என்பவர் பின்னர் சடலமாக மீட்கப்பட்டார்.

ஓட்டமாவடி பாலம் அருகில் இரு முஸ்லீம் இளைஞர்கள் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டனா. (121)

### ஹோட்டலில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தினம் நடைபெற்றது. ஹோட்டலுக்கு வந்த சிலர் கைவிட்டுச் சென்ற பார்சலை ஊழியர் பிரித்துப் பார்த்தபோது இக்குண்டு வெடித்தது (121)

### டீசல் கிடைக்கும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வழங்கப்படவில்லை. இன்றும் இந்த சுழற்சி முறை மின்சாரம் வழங்கப்படமாட்டாது.

டீசல் தட்டுப்பாடும், ஜெனறேற்றர் ஒன்று பழுதடைந்ததுமே இதற்குக் காரணமென மின்சாரப்பகுதியினர் தெரிவித்தனர்.

ரயில்மூலம் டீசல் யாழ்ப்பாணம் வந்துசேராத பட்சத்தில் தொடர்ந்து சுழற்சி முறை மின்சாரம் வழங்கக்கூடிய சாத்தியமில்லை என்றும் மின்சாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில சில பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு இரவில், தற்போது வழங்கப்பட்டுவரும் மின்சாரமும் தடைப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

டீசல் கிடைக்கும்வரை, தற்போது வழங்கப்பட்டுவரும் மின்சார விநியோகத்தில பாதிப்பு ஏற்படலாம் என்று கூறப்படுகிறது. (அ)

### ரயில் சேவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரயில் சேவைகள் மட்டுமே நடைபெற்றுவந்தபோதிலும் நேற்று முன்தினம் நண்பகல் 12 மணிக்குப் பின்னர் எந்தவொரு சேவையும் நடைபெறவில்லை. (121)

### வங்கிக்கட்டளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து அனுப்பிவைக்கப்படவில்லையாயினும், வங்கியில் இருப்பில் இருந்த பணமே இம்மாதச் சம்பளமாக ஆசிரியர்கள், ஊழியர்களுக்கு வழங்கப்பட்டதாகக் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

### சுகவீனலீவில் சென்ற

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பது தெரியவில்லையென்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

12 பொலிஸ் அதிபர்களும், 15 உதவிப் பொலிஸ் அதிபர்களும் இவர்களுள் அடங்குவர்.

களுத்துறை, மாத்தறை, மஹியங்கனை, ஹிங்குராகொட, பதுளை முதலிய பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளே இவ்வாறு லீவில் சென்றுள்ளனர்.

அவசரகாலச் சட்டத்தின்கீழ் சகல பொலிஸாரினதும், ஆயுதப படையினரதும் சகல லீவுகளும் ரத்துச் செய்யபபட்டுள்ளதால் இவ்வாறு சுகவீன லீவில் சென்றவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்ட பொலிஸார், அவர்கள் ஆஸ்பத்திரிகளிலோ அல்லது அவர்களது வீ களிலோ இல்லை என்றும் தெரிவித்தனர்.

இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகள் தீவிரமாக விசாரணை செய்துவருகின்றனர்.

## கண்ணிவெடி: 6 இராணுவத்தினர் பலி!

(கொழும்பு)

வலஸ்முல்லை மித்தெனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கண்ணிவெடிச்சம்பவத்தில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

சம்பவத்தை அடுத்து இராணுவத்தினர் திருப்பிச் சுட்டபோது 4 பேர் கொல்லப்பட்டனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கண்ணிவெடித்ததை அடுத்து இராணுவ வீரர்கள் மீது தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்குதல் நடத்தினர் என்றும் இச்சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தனர் என்றும் தெரிவிககப்பட்டது. (121)

### 40 நாட்களில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

உரையாற்றிய பாராளுமன்ற விவகார அமைச்சர் திரு வின்சென்ட் பெரேரா, இத்தகவலைத் தெரிவித்தார்

கடந்த மாதம் 690 பேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர் எனவும், இவர்களில் 762 பேர் பொது மக்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

### சமாதானக் குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது ஆலோசிக்கப்பட்ட சகல தமிழ்க் குழுக்களையும் கொண்ட சமாதானக்குழுவில் முஸ்லிம் காங்கிரஸ் உட்பட வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து அரசியல் அமைப்புக்களும் இடம்பெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது.

இது தொடர்பான அறிவிப்பை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு ரஞ்சன் விஜயரத்ன விடுத்திருந்தது தெரிந்ததே.

அமைதிப்படையை விலக்கிக்கொள்வது தொடர்பான காலக்கெடு குறித்து ஆராய்வதற்காக மற்றுமொரு குழுவை நியமிக்கவேண்டுமென்று புதுடில்லிப் பேச்சுக்களின்போது யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தக் குழுவில் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதியும் இடம்பெறவேண்டும் என்று அதன் தலைவர் ஜனாப் அஷ்ரப் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்தே இந்தக் குழு அமைப்பது குறித்து முடிவெடுக்கப்படவில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

# "மின்இணைப்பில்லையேல் நிவாரணம் வழங்கவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"இலங்கை அரசு தமிழ் பேசும் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை நசுக்குவதற்கு எதிராக, தமிழ்பேசும் மக்கள அரசியல் ரீதியாகவும், ஆயுதம் தாங்கியும், ஜனநாயவழிமுறைகளின் ஊடாகவும் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் தமிழர்களாலேயே தமிழ்பேசும் தொழிலாளி வர்க்கம் மிகவும் மோசமாகச் சுரண்டப்படுவதுடன் அவர்களின் ஜீவதார உரிமைகள் மறுக்கப்பட்டு நாளாந்த சீவியத்தைப் போக்குவதற்கே போதாத மிகக் குறைந்த சம்பளம் வழங்கப்படுவது மிகவும் வெட்கப்படக்கூடிய நடைமுறையாகும். தொழில் நிலாகா அதிகாரிகள் தமிழர்களாக இருந்தும், தினமும் பத்து அல்லது பன்னிரண்டு மணிநேரம் தொழிலாளர்களிடம் வேலை வாங்கப்படுவதும், அதற்கு எவ்வித மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படாதது மட்டுமன்றி, சட்டப்படி சம்பள நிர்ணய சபையால் நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்தை வழங்காமல் தட்டிக்கழித்து வருவது வேதனைக்குரியதாகும்".

இவ்வாறு ஈழத் தொழிற்சங்க சம்மேளனத்தின் சார்பில் ஈவினையிலுள்ள அஸ்பெஸ்டோஸ் சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்கள் மத்தியில் திரு. ஏ. பி ரகு பேசும்போது குறிப்பிட்டார். மானிப்பாயில் உள்ள ஈழத் தொழிற்சங்கக்காரியாலயத்தில் திரு. ஆர். பிரதீப் தலைமையில் நீண்ட பெற்ற இக்கூட்டத்தில் மேற்படி தொழிற்சாலையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

திரு. ரகு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"தொழிலாளி வர்க்கத்தை முதலாளிகள் தொழில் ரீதியாகவும், சாதி, இன, மத பேதங்களின் அடிப்படையிலும் பிளவுபடுத்திவைத்திருப்பதன் மூலம், எம் மத்தியில் ஐக்கியம் உருவாகுவதைத் தடுத்து, தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்களைப் பலவீனப்படுத்திவருகின்றனர். இதனை உணர்ந்து, தொழிலாளர் வர்க்கம் தம் மத்தியில் ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் வளர்த்துககொள்ளவேண்டும்.

"வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு உரிய மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவற்றை மீளத் திருத்தி அமைத்து மின்சாரம் வழங்குவதனை நொண்டிச்சாட்டுகளைக் கூறி இலங்கை அரசு தட்டிக்கழித்து வருகின்றது. இதனால் தனியார் துறையை சேர்ந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் நிற்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இப்பிரச்சினையில் வடக்கு கிழக்கு மாகாண அரசு தலையிட்டு மின்சாரம் வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும், இன்றேல் பாதிக்கப்பட்ட சகல தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்க அரசு முன்வரவேண்டும்."

இக் கூட்டத்தில் அஸ்பெஸ்டோஸ் தொழிற்சாலையை சேர்ந்த பல தொழிலாளர்களும் உரை நிகழ்த்தினர் இறுதியில் தொழிற்சங்க நிருவாகக் குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

### பத்மநாபாவிற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தில கேள்வி எழுப்பினார்.

திரு. பத்மநாபா உட்பட இந்த இயக்கத்தைச் சேர்ந்த சகலருக்கும் பொது மன்னிப்பு அளிப்பதாக முன்னாள ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பல தடவை வாக்குறுதியளித்திருந்த போதும் அதற்கு மாறாக அவ்வாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருப்பது ஏன் என்றும், அவர் மேலும் கேள்வி எழுப்பினார்.

### அரசைக்

(1 ம பககத் தொடர்ச்சி)

திரியாக இருந்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளை சுதந்திரக் கட்சியினர் மறந்துவிட்டார்களா?

"அன்று ஐக்கிய தேசியக் கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கியது. ஆனால் இன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி எமது அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை

"யுத்த நிறுத்தம் மேற்கொள்ளுமாறு பல தடவை வேண்டுகோள் விடுக்கப்பட்டும் எவ்வித பயனுமில்லை

### காமினி பேச்சு

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா பேசுகையில் கூறியதாவது;-

"மனித உரிமைகள் பற்றிப் பேசும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் சமூகத்தின் பல்வேறு மட்டத்திலுமுள்ளவர்களை ஆயுதம் தாங்கியவர்கள் சுட்டுக்கொல்லும்போது மட்டும் ஏன் மௌனமாக இருக்கிறார்கள். [நாட்டின் தற்போதைய அவலநிலைக்கு நாம் அனைவருமே பொறுப்பேற்க வேண்டும். பலாத்காரத்தின் மூலம் எந்தப் பிரசனைக்கும் தீர்வுகாண முடியாது என்பதனை நாம் அனைவரும் உணரவேண்டும்" என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் திரு. பிரின்ஸ் காசிநாதர் பேசுகையில், "வடக்கு கிழக்கு மக்கள் அனுபவித்த வதைகளை நாட்டின் ஏனைய பாகங்களிலுள்ள மக்கள் இன்று அனுபவிக்கிறார்கள்" என்றார்.

## அனுமதி

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் புனர்வாழ்வு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை, உறவினர்கள் சென்று பார்வையிடுவதற்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## இந்தியா மௌனம்

(புதுடில்லி)

அமைதிப் படை விவகாரம் குறித்து இலங்கை ஜனாதிபதி தமது யோசனைகளை இந்தியாவுக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்திருந்த போதிலும் இது குறித்து நேற்று நள்ளிரவு வரை இந்தியா எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை.

## 'வவுச்சர்'கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்குரிய வவுச்சர்'கள் யாழ் செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

இவைகளைத் தபால் மூலம் அனுப்பிவைக்கும் வேலைகள் தற்போது யாழ். செயலகத்தில் மேற்கொள்ளப்படுகின்றது.

## தனிச் சிங்களத்தில் கடிதம்

(சுன்னாகம்)

சம்பள முற்பணத்திற்கு விண்ணப்பித்துள்ள தபால் திணைக்கள ஊழியர்களுக்கு இது தொடர்பான அறிவிப்புக்கள் தனிச் சிங்களத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்டோருக்கான இருவருட சம்பள முற்பணத்திற்கு சுன்னாகம் தபால் நிலையத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கு பகுதி அரசாங்க அதிபர்களின் சிபார்சு பெறப்படவேண்டுமென்ற அறிவுறுத்தல் சிங்கள மொழியில் தனித்தனியாக அனுப்பிவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/6/31. Eelanadu P. O. Box No: 49. Telegram: Eelanadu. Telephone; 22389, 24126.